# இயல் - 5
# சமுதாயச் சிந்தனை

ஆ.பி.யின் படைப்புக்கள் வெளிப்படுத்தும் சமூகச் சிக்கலை இவ்வியல் ஆய்கிறது.

படைப்பாளர்கள் தனித்து இயங்குவதில்லை. அவர்கள் சமூகத்தின் ஓர் அங்கமாவர். படைப்புகளை உருவாக்க சமூகம் படைப்பாளனுக்கு ஓர் உந்து சக்தியாக இருக்கிறது. சமூகச் சிந்தனை இல்லாமல் எந்தப் படைப்பாளனும் படைப்புகளை உருவாக்க முடியாது. இலக்கியம் ஒரு சமுதாய நிலையம். இலக்கியவாதி சமுதாயத்தின் சிக்கல்களை மக்களுக்கு எடுத்துணர்த்தும் ஒரு தூண்டு கோல்.

சமுதாயத்தை உருவாக்குவதில் தனிமனிதனைவிட படைப்பாளனின் பங்கு அதிகம். அவர் சமுதாயத்திற்குத் தன் படைப்புகள்வழி பல நல்ல கருத்துகளைக்கூற முடியும். தனிமனிதன் நல்ல சமுதாயத்தை உருவாக்கத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தாலும், அதன் பயன் சமுதாயம் முழுமைக்கும் போய்ச் சேராது.

சமுதாயம் என்பது எப்பொழுதுமே மாறிக் கொண்டிருக்கிறது. அது எப்பொழுதும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த மாறுதலை ஒரு புதின ஆசிரியர் பதிவு செய்ய வேண்டும் (அ) ஏற்றுக்கொள்ள வேண்டும்.

“நாவல் இலக்கியத்தில் சமுதாயத்தில் மனிதன் எவ்வாறு இயங்குகிறான் என்பதைப் பிரதானமாகச் சித்திரிக்க வேண்டும். மனிதனது சமூக வாழ்வைச் சித்திரிக்கும் பொழுது நாவல் ஆசிரியர் மனிதனை முழுமையாகப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறான். எழுத்தாளனது இந்த நடவடிக்கையானது மனித நடத்தையின் காரணகாரியங்களை ஆராயத் தூண்டுகிறது”[1]

இதன் விளைவாக மனித நடவடிக்கைகளின் சாரத்தைக் கலைப் படிமங்களாக புதின ஆசிரியர்கள் படைத்து வருகின்றனர்.

## சமுதாயம் - விளக்கம்

சமூகக் குழுக்கள் இணைந்து உருவானது சமுதாயம். மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழும் இடத்தைச் சமுதாயம் எனலாம்.

“ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள்கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்”[2] என்கிறது.

“வாழ்க்கையின் அடிப்படை நிலைகளைப் பங்கிட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்ந்து வாழுகின்ற மக்கள் தொகுதி சமுதாயம்”[3] என்று வாழ்வியல் களஞ்சியம் பொருள் கூறுகிறது.

“மனிதன் தன்னுடன் வாழ்வாரோடு கொள்ளும் அனைத்து வகைத் தொடர்புகளின் முழுமையைப்பற்றிக் குறிக்கும் ஒரு மிகப் பொதுவான சொல் சமுதாயம்”[4] எனச்சுட்டுகிறது.

“இயற்கையின் படைப்பில் மனிதன் குறைகளுடையவன். மற்றவர்களுடன் நெருங்கிப் பழகும்பொழுதே அவனது இயல்பான ஆற்றல் வெளியாகும். எனவே, மனிதன் மனிதனாக முழு நிறைவுடையவனாக வாழ

வேண்டுமாயின் சமுதாயம் என்ற அமைப்பு மிகவும் தேவைப்படுகிறது"[5] என்பார்.

மனிதன் சமுதாய வாழ்வில் அடுத்தவனைச் சார்ந்து வாழ வேண்டியவனாக இருக்கிறான். இதை,

"பிறப்பு முதல் இறப்பு வரையிலும் மனிதனுக்கு நாலு பேர் தேவைப்படுகிறார்கள். அவன் உண்ணும் உணவில் உடுக்கும் உடையில், வசிக்கும் வீட்டில், வீட்டில் அவன் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளிலும் சமுதாயத்தின் கூட்டுறவு இருக்கிறது. சமுதாயத்தின் உழைப்பு இருக்கிறது"[6].

"சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று. ஆறறிவு படைத்த மக்கள் இனத்துள்ளும் உணர்வற்ற, அடிப்படை உணர்வில்லாத மக்கள் கூட்டம் சமுதாயம் என்னும் சொல்லுக்கு இலக்காகாது"[7] என்பார் அ.மு. பரமசிவானந்தம்.

"சமுதாய உணர்வின் அடிப்படையில் தோன்றிய மொழி, ஆற்றல் பெற்று சமுதாய உணர்வின் பல படிகளில் வளர்ச்சி பெற்று நின்று மனித உள்ளத்துடன் கலந்தபோதுதான் இலக்கியம் பிறந்தது"[8] என்கிறார் இரா. தண்டாயுதம்.

சமுதாயம் என்பதை ஒரே சொற்றொடரில் வரையறுக்க வேண்டுமானால் ஒழுங்குடன் இருப்பது. ஒரு மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுப் பிறருடன் கூடி வாழ்கிறான். இந்தக் கூட்டுவாழ்க்கையே சமுதாயம் ஏற்படக் காரணமாகிறது.

மக்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் வாழ்க்கையைச் சமுதாய வாழ்க்கை எனலாம்.

மக்களாகப் பிறந்தவர்களின் இயல்பு மற்றவர்களோடு சேர்ந்து வாழ்வது ஆகும். இயற்கையாகவே கூடிவாழும் பண்பு மக்களிடம் அமைந்திருக்கிறது. ஓரே விதமான பழக்கவழக்கங்களும் பண்பாடும் கொண்ட மக்கள்தொகுதியையே சமுதாயம் என்கிறோம்.

“தாயே முற்காலத்தில் குடும்பத் தலைவியாக வாழ்ந்திருக்கிறாள். தாய்வழிச் சமூகம் இலக்கிய காலத்திற்கு முந்தியது. சரித்திர காலத்திற்கு முந்தியது. மிகவும் பழமையானது. தாய்வழி மரபில் பெருகிய கூட்டத்தைச் சமுதாயம் என்று கூறுவது பொருத்தமுடையதாகும் என்கிறார் நா.வானமாமலை”[9].

“சமுதாயம் என்பது மனித இனத்தில் சமூகப் பொருளாதார அரசியல் ஈடுபாடுகளில், தொடர்புகளில் இயங்கிவரும் ஓர் அமைப்பாகும் என்றும் இவ்வமைப்பு ஒரு குறிப்பிட்ட நாகரீக அமைப்பிற்குள் இயங்கி வருகிறது”[10] என்றும் சமூகவியலார் குறிப்பிடுகின்றனர்.

“வரையறுக்கப்பட்ட ஒரு பரப்பின்கீழ் வாழும் மக்களுடைய சமூக வாழ்க்கையின் முழுமையான அமைப்பே ‘சமுதாயம்’ எனப்படும்” என்று ச. பரிமளா கூறுகிறார்”[11].

மக்கள் பல குழுக்களாகக் கூடிவாழும் வாழ்க்கையே சமுதாயம். இம்மாதிரியான சமூக அமைப்பிலிருந்து மனிதன் மாறுபட்டு நடக்கும் போது பல சிக்கல்களுக்கு ஆளாகிறான்.

## இலக்கியமும் சமுதாயமும்

எந்த ஒரு படைப்பாளனும் தான் படைக்கும் இலக்கியத்தை ஒரு சமுதாயம் சார்ந்தே எழுதுகிறான். இதனால் சமூகமும், இலக்கியமும்

ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பேசப்படுவனவாம். சமுதாயத்தைச் சார்ந்து அதனை விவரிப்பனவே இலக்கியங்கள் என உணரலாம்.

இலக்கியம், சமுதாயம் குறித்துப் பல கருத்துகளை அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர்.

“சமூகக் காரணங்களின் விளைவாக இலக்கியமும், இலக்கியக் காரணங்களின் விளைவாகச் சமூகமும் அமைவது தவிர்க்க முடியாதது. இதனால் சமூகம், இலக்கியம் ஆகிய இரண்டும் ஒன்று மற்றொன்றிற்குக் காரண காரியமாக விளங்குவதைக் காணலாம்”[12] என்று அறிஞர் ஜெகதீசன் குறிப்பிடுகிறார்.

“சமுதாயத்தின் உணர்வுகளோடும், உண்மைகளோடும்தான் இலக்கியக் கலை பிறக்கிறது. அவ்வாறு அவற்றால், அவற்றோடு அவற்றுக்கிடையே தோன்றாத இலக்கியங்கள் காலத்தை வெற்றிகொண்டு நீடு வாழ்தல் அரிது”[13] என்பார்.

சமுதாயமும், இலக்கியமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக, ஒன்றோடொன்று உறவு உடையதாக அமைகின்றன. இதனால் இலக்கியங்கள் சமுதாயத்தில் காணப்படுகிற வறுமைநிலை, பெண்கள்நிலை, தொழிலாளர்கள் நிலை போன்றன குறித்துப் பேசுவதை அறியமுடிகிறது.

## சமுதாயமும் எழுத்தாளனும்

எழுத்தாளன் காணுகின்ற மக்கள் சமுதாயத்தையும், காண விழையும் புதிய சமுதாயத்தையும் படைப்பில் கொண்டு வருகிறான். படைப்பு, சமுதாயத்தோடு உறவு கொள்வதோடு மாற்றத்தையும் விளைவிக்கிறது. எழுத்தாளன் உடல் மறைந்தாலும் அவனது படைப்புகள் என்றும் வாழவே செய்கின்றன.

“ஒவ்வொரு காலகட்டத்திலும் புதுப்புதுப் பிரச்சினைகளும், தொல்லைகளும், துன்பங்களும், தீமைகளும் சமுதாயத்தில் ஏற்படுவதுண்டு. அவற்றை வெளிப்படுத்துவது எழுத்தாளனின் கடமை”[14] என்கிறார் அகிலன்.

எழுத்தாளனின் எழுதுகோல் ஒரு சமுதாயத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை கொண்டது எழுத்தாளர்கள் தனிப்பிறவி எடுத்தவர்கள் அல்லர். சமுதாயச் சூழலில் உருவாக்கப்படுகிறார்கள். மக்களைச் சுற்றி மண்டிக்கிடக்கும் சமுதாய நிகழ்வுகளின் தாக்கமும் பாதிப்புமே ஒருவனை எழுத்தாளனாக உருவாக்குகின்றன.

ஓர் எழுத்தாளன் ஒன்றைப் படைக்கிறான் என்றால் அதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது சமுதாயத்தின் நிகழ்ச்சித் தூண்டுதல்களே ஆகும்.

இளமைத் திருமணம், கல்வி, வரதட்சணை, விதவை, இயந்திரவாழ்க்கை, வறுமை, பொருளாதாரநிலை, சமுதாயசீர்கேடுகள் தலைமுறை இடைவெளி, பெண்ணடிமை, மூடநம்பிக்கை, பழக்கவழக்கம் போன்றவற்றை ஆ.பி. தனது புதினங்களுள் பதிவாக்கியுள்ளார்.

சமுதாயத்தில் பெண்களுக்கு உண்டாகும் சிக்கல்கள் குறித்தும், பெண்கள் அவற்றினை எதிர்கொண்டு செயல்படுவதையும், அச்சிக்கல்களுக்கு அவர்கள் எடுக்கும் தீர்வுகள் குறித்தும் ஆ.பி. தமது படைப்புகளில் நுணுக்கமாகச் சுட்டியுள்ளார்.

சமுதாயத்தில் பெண் அஃறிணை உயிரியாகவும், பணிப் பெண்ணாகவும், சமையல் செய்பவளாகவும், போகப்பொருளாகவும், குழந்தைபெறும் இயந்திரமாகவும் நிலவுவதை,

“பெண்களைப் பற்றிய சமூக எதிர்பார்ப்பு ஒரு குறிப்பிட்ட அடிப்படையிலேயே அமைந்து விட்டது. இனப்பெருக்கத்திற்கும் இல்லக் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கும் உரியவர்கள் பெண்கள் என்பதற்கு அப்பாற்பட்டு அவர்களின் உண்மைவாழ்வு எண்ணப்படுவதில்லை”[15] என்று கோ. சரோஜா குறிப்பிடுகிறார்.

பெண்களின் சிக்கல்களைத் தனியாகப் பார்க்காமல், ஆண்களுக்கும் அவர்கள் வாழ்வில் ஏற்படக்கூடிய துயரங்களையும், மனப் போராட்டங்களையும், சிக்கல்களையும் ஒரு சமுதாயச் சிக்கலாகப் பார்க்க வேண்டியது அவசியமாகும். பெண்களுடைய முன்னேற்றமும், உரிமையும் ஆண்களால் சீண்டிப் பார்க்கப்படும்நிலையும், பழித்துரைக்கப்படும்நிலையும், ஆண்கள், மாணவர்களின் மனப் போராட்டநிலையும், தொழிலாளர்கள்நிலையும், வறுமைநிலையும், வேலைவாய்ப்பின்மையும், அரசியல்நிலை, அடித்தள மக்களின் வாழ்க்கைச் சிக்கல்கள், குழந்தை தொழிலாளர்நிலை, பெற்றோர்களால் ஏற்படும் சிக்கல்கள், வறுமையின் பாதிப்பு, ஆணாதிக்க அதிகாரம், காதல் வயப்படுதல், மாணவர்களின் தீய, பழக்கவழக்கங்கள், கல்வி நிலை, மாணவிகளின் நிலை, வரதட்சணை, முதிர்கன்னி, விதவைநிலை, மறுமணம், மணவிலக்கு, மக்கட்பேறு, இருபாலர்நிலை போன்றவை சமுதாய சிக்கல்களாக விளக்கப்பெறுகின்றன.

## வாழ்க்கை முறை

கதைமாந்தர்கள் வாழ்க்கைமுறை வாயிலாகப் புலனாகும் சமுதாயச் சிக்கல்களை முன்னிலைப்படுத்தி மனித வாழ்வு சிறப்பதற்கான நெறிமுறைகளை வகுத்துரைக்க முற்பட்டுள்ளது.

'மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான்' என்பது சமுதாயத்தில் கூறப்பட்டு வரும் ஒரு கதை. அப்படிப்பட்ட மனிதன் பல நாகரிக வாழ்வைக் கற்றுக் கொண்டு வையம் சிறப்படைய வாழ்வில் பல சாதனைகளையும் பல வெற்றிகளையும் கண்டு வருகிறான். மனிதனே இன்று வளர்ச்சியடைந்து உலகத்தை ஆட்டிப்படைக்கும் சகல சக்திகளையும் பெற்றிருக்கின்றான். மனித வளர்ச்சியானது குறிப்பிட்ட வரையறையைத் தாண்டி எல்லையில்லாத நிலையை அடைந்துள்ளது.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் மக்கள் முன்னேறியிருப்பதைக் காண்கிறோம். கல்வி, அரசியல், தொழில், கலை, சிந்தனை, சமுதாய வாழ்வு, ஆடை அணிகலன்கள், செல்வப் பெருக்கு, மக்கள் இன்ப வாழ்வுக்கான கருவிகளைக் கண்டுபிடித்தல் போன்ற பல துறைகளில் இன்றைய மக்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றனர்.

ஆதிகால மக்கள் ஆடையில்லாமல் திரிந்தனர். வீடில்லாமல் அலைந்தனர். அவர்கள் மொழிகூடத் தெரியாத மிருகங்களாகவே வாழ்ந்தனர். மனிதன் இன்று சிந்தனை, செயல், வாழ்வு அனைத்திலும் வளர்ச்சியைக் கண்டுள்ளான்.

தனிமனிதனாக வாழ்ந்த மனிதன், பின்னர் குடும்பமாக வாழக் கற்றுக் கொண்டான். அவனின் குடும்பமானது பிற்காலத்தில் ஒரு சமூக அமைப்பாக வளர்ந்து, பல நாகரிக வளர்ச்சிகளைக் கண்டு கலை, பண்பாடு, பழக்கவழக்கம் முதலியவற்றின் நோக்குகளையும், போக்குகளையும் கண்டு வளமான வாழ்வு வாழக் கற்றுக்கொண்டான். பண்பாடு குடும்பம் என்ற பெயரில் அமைகிறது. மனித வாழ்க்கையானது, எப்படி வாழவேண்டும் என்ற நோக்கில்லாது, இப்படித்தான் வாழவேண்டும்

என்ற சில காலவரையறைகளைக் கணக்கில் கொண்டு, கட்டுப்பாட்டுடன் ஒழுங்கு முறையில் அமைகிறது. பிறர் பழிக்கு அஞ்சி வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொண்டது மனித சமுதாயம்.

“உலக மக்களது மனநலத்தின் கூறுகளே பண்பாடாக உருக்கொள்வதைக் காணமுடிகிறது. பண்பாடு என்பது பல விழுதுகளுடன் கூடிய பெரிய ஆலமரம் போன்றது. மக்கள் நாகரிகத்திலே காலப்போக்கில் மாறுதல்கள் பல ஏற்படினும், பொதுவாக நல்லியல்புக் கூறுகளை ஏற்றுப் போற்றவும் தீயனவற்றை வெறுத்து ஒதுக்கவுமான அறச்சார்புடைய மனநிலை உலகெங்கும் இருத்தலைக் காணலாம்.”[16] என்று பண்பாட்டினைப் பற்றி வைத்தியலிங்கம் கூறுகின்றார்.

மக்களின் வாழ்வில் புறவாழ்வினை மையமாகக்கொண்டே அவர்களது பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் எல்லாம் வெளிப்படுகின்றன. மனிதனை விலங்கினின்று வேறுபடுத்துவது பண்பாடு. பண்பாடானது காலத்திற்குக் காலம், நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

அவரவர் வாழும் இடத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப பல்வேறு மாறுபாடுகள் காணப்படுகின்றன. இன்றைய மக்கள் கிராம வாழ்விலிருந்து நகர வாழ்வு வாழ விரும்புகின்றனர். கிராம வாழ்வை வெறுத்து ஒதுக்குகின்றனர். மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்யவும், பல்வேறு கல்வி முறைகளைக் கற்கவும் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற உணர்வுடனும் செயல்படுகின்றனர்.

எந்த ஓர் இலக்கியமாக இருந்தாலும், அது தோன்றிய காலத்தைப் பிரதிபலிக்காமல் இருக்க முடியாது. அவ் இலக்கியம் தோன்றிய

காலத்தையோ, அவ்விலக்கியம் கூறும் காலத்தையோ விளக்குவதாக அமையும். இதனைக்,

"குறிப்பிட்ட சமுதாயத்தில் உணவு, தொழில், நம்பிக்கைகள், வீட்டின் அமைப்புமுறை முதலியவைகளைக் கூறுவது மாந்தவியல் போக்காகும்."[17] ஆ.பி. புதினங்கள் ஒவ்வொன்றிலும் வாழ்க்கைமுறை செவ்வனே சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

## சடங்குகள்

மனித வாழ்க்கையில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் மக்களால் தொடர்ந்து பின்பற்றப்படுமானால் அவற்றைச் சடங்குகள் என்று கூறலாம். மனிதனது பிறப்பிலும், இறப்பிலும், திருமணத்திலும், வழிபாட்டிலும், பருவமெய்துவதிலும் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகைச் சடங்கு முறைகள் இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

வாழ்க்கைத் தேவை அல்லது அச்சத்தின் அடிப்படையில் தோன்றியவை சடங்குகளும், சம்பிரதாயங்களும் ஆகும். "புனிதத்தன்மை என்னும் பிரம்மையைத் தோற்றுவித்து அதன்மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வில் இரண்டாம் கட்டமாகச் சடங்குகள் ஏற்பட்டன"[18] என்பார்.

திருமண நிகழ்ச்சியின் போதும், இறப்பு நிகழ்ச்சியின் போதும் நல்லது கெட்டது எதுவாக இருப்பினும் அச்சூழலுக் கேற்பச் செயல்படும் மக்களின் இயல்பு வட்டாரப் பாங்கை வரவழைக்கிறது.

## பூப்புச் சடங்கு

"தகனம்" புதினத்தில் 'ராணி' பூப்படைந்த போது அவள் அண்ணன்கமார் சீர் செய்வதாகக் காட்டப் பெற்றுள்ளது. சுரேசும், சம்பத்தும்,

ராணிக்கு வேலை வாங்கித்தர முடிவு செய்தனர். சின்ராசு தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று வருந்துகிறான். பின் தன் ரத்தத்தை விற்றுச் சீர் செய்கிறான்.

"சம்பத்தும், சுரேசும் சபையில் எல்லோரும் பார்க்க புடவையை வைத்துக் கொடுத்தார்கள். முன்னால் வந்த சின்ராசு, சின்ன, கைக்கு அடக்கமான பெட்டியைத் திறந்து பளபளக்கும் தங்கமோதிரத்தை வெளியிலெடுத்தான்" (தக., ப.45) என்ற வரிகள் மூலம் சீர் செய்வதன் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

## சமூக மாற்றம்

"ஒவ்வொருவரும் தாம் சேர்ந்து இருக்கும் இனத்தாலும், செய்யும் தொழிலாலும் வெவ்வேறு கூட்டமாகப் பிரிக்கப்படுகின்றனர். அந்தந்த இடத்தில் ஏற்படும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த மக்களின் வாழ்க்கை அமைப்பு மாறுபடுகிறது"[19] இவ்வாறு ஏற்படும் மாற்றத்தை சமூக மாற்றம் என்பர்.

'தகனம்' புதினத்தில் சின்ராசு தன் தந்தை செய்யும் தொழிலை இழிவாக நினைக்கின்றான். தந்தை செய்யும் தொழிலை மகன் செய்ய சோம்பேரித்தனம் காட்டுகின்றான். இதைச் செய்வது கடினம். அதிகாரி வேலைதான் சுலபமான வேலை என நினைக்கின்றான். நாட்டில் சோம்பல் நிறைந்தவர்கள் அதிக அளவில் இருப்பதாலேயே நம்முடைய நாடு பின்தங்கிய நாடாகக் காணப்படுகின்றது.

இளைஞர்களின் இந்த நிலையை,

"கடம்பலும் சோம்பலும் கூடாதென்றார் வெறும்
கூச்சலில் வண்டியும் ஓடாதென்றார்"[20].

என்று கவிஞர் சுரதா கூறுவது சோம்பலுக்குப் பொருத்தமாக உள்ளது. தன் தந்தை செய்யும் தொழில் கேவலமான தொழில் எனக் கருதி தனது மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்கின்றான் வெட்டியான் மகன் சின்ராசு.

"மனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்களைத்
தன்னகத்தே பதித்துக்காட்டும் ஆவணமாக
நாவல் விளங்குவதுடன் இன்றைய
சமூகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது"[21]

என தா.வே. வீராச்சாமி கேட்கிறார். இக்கூற்றிற்கேற்ப ஆ.பி.யின் 'தகனம்' படைக்கப்பெற்றுள்ளது.

"அப்பன் தொழிலு அசிங்கம் ஆபிசர் உத்தியோகம்தான் அழகுன்னு ஒத்தக் கால்ல நின்ன. கைல தொழிலு. எப்பவுமே சோறு போடும் நாத்தம் புடிச்ச தொழிலானா என்ன? இது குடுக்கிற சோறு நாறுமா? துணி நாறுமா? நாம தான் ராஜா. எவனுக்கும் கைகட்டிச் சேவகம் பண்ணாத உத்தியோகம் புண்ணியம்"

(தக.பக்.3-4)

என்று ஆசிரியர் சமூகமாற்றம் வேண்டிச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## சமுதாய வழக்கம்

சமூகத்தில் மக்கள் காலம் காலமாக பின்பற்றிவரக்கூடிய செயல் முறைகளை சமுதாய வழக்கம் எனக் கருதலாம். இதனை ஆசிரியர் தனது புதினங்களில் பதிவு செய்துள்ளார். 'க.கை.பி' புதினத்தில்

"மாப்பிள்ளை. . .ஊர்ல எல்லா ஏற்பாடும் முடிச்சிட்டேன். தாலிக் கொடி தயார். கூரைப் புடவை, பட்டுவேட்டி, சட்டை, புதுக்கட்டிலு சகலமும்

தயார். மண்டபமும் காத்திட்டிருக்கு. பத்திரிகை அடிக்கக் குடுத்துட்டுத்தான் வண்டியேறினேன். இப்ப நான் வந்திருக்கிறது உங்க ரெண்டு பேருக்கும் சேதியச் சொல்லத்தான். நாக்கு மேல நாக்குப் போட்டு விவாதம் பண்ண இல்ல. பொடிசுங்க உங்க அறிவுரையைக் கேக்கவும் இல்ல. புரியுதுங்களா. . . ?” (க.கை.பி.115)

என்று கூறியிருப்பது காலங்காலமாக சமுதாய வழக்கத்திலிருக்கும் திருமணச் சடங்குமுறை நிகழ்வுகளை மீனாவின் தந்தை முருகேசன்வழி ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார்.

### சமுதாயக் கண்ணோட்டம்

சமுதாயத்தில் பெண்களே பெண்ணுக்கு எதிரியாய் இருக்கின்றனர்; சொற்களால் பெண்ணைக் காயப்படுத்துகின்றனர். இதனை ஆசிரியர், க.கை.பி. புதினத்தில்,

“என்னத்துக்கு மாத்திரைன்னு எத்தனை தரம் கேட்டாச்சு? உடம்பு வியாதி இல்லாம கல்லுக்குண்டாய்த்தானே இருக்கா. . . ?

கீதாவுக்கு ஆத்திரம். . . .விஷயம் தெரியாத வேகம்.

அபார்ஷனுக்குக்கூட மாத்திரைதான். தீபாவோடது என்ன வகைன்னு தெரியல்லியே. . .

நாராயணி கிண்டலடித்தாள்” (க.கை.பி. ப.90)

என்னும் வரிகள் மூலம், நாராயணி, தீபாவை சமுதாயக் கண்ணோட்டத்துடன் பேசுவதை அறிய முடிகிறது.

வே.ம. புதினத்தில்,

“என்ன சரசுவதி டீச்சர்? உங்க மெய்க்காப்பாளரைக் காணோமே. லீவா?

கணக்குடீச்சர் லலிதா கிண்டலடித்தாள். கிண்டலும், கேலியும் அவளின் உடன்பிறப்புகள். மற்றவர்களின் வலி புரியாமல் கேலி பண்ணுவாள். இதோ இப்போதும் அப்படித்தான்.

என்ன டீச்சர்? எவ்வளவு நேரமாக் கேக்கறேன்? அடி உதையிலே காதும் செவிடாயிடுச்சா என்ன? பதில் சொல்லாம நீங்க பாட்டுக்கு இருந்தா என்ன அர்த்தம்? கேக்கற எனக்கு என்ன மரியாதை? ம்?''

பட்டாசாய்ப் பொரிந்தாள் லலிதா''(வே.ம. ப.85)

என பெண்ணே பெண்ணைக் கிண்டலடிப்பதைக் 'கனவுகள் கைப்பிடிக்குள்', 'வேடிக்கை மனிதர்கள்' போன்ற புதினங்கள்வழி ஆசிரியர் பெண் சமூகத்தைக் காட்டுகிறார்.

## சமூக அவலம்

சமூகத்தில் மக்களுக்கு ஏற்படும் துயரங்களை, இழிநிலைகளை படைப்பாளர்கள் சமூக அவலமாகக் கருதி தங்கள் படைப்புகளில் படைத்து வருகின்றனர். ஆ.பி. 'தகனம்' புதினத்தில்,

"க்கும் . . . எந்த வெயிட்டான பார்ட்டியும் வெட்டியானுக்குக்கூட நூறு ரூபா போட்டுத் தரமாட்டான். சட்டம் பேசிட்டுப் போயிடுவானுக. . . சரிவுடுங்க சார். . . கூடமாட யாருமில்லேயே. . . தங்கச்சிங்க கூரை வேயுதுங்க வீட்டாண்ட... நாமட்டும் எப்படிப் பண்ண. . .?''

(தக. ப.73)

என்று சின்னப்பொண்ணு நிலையை பதிவு செய்துள்ளார். சூ.வி.வை புதினத்தில்,

"அரைகுறை ஆடைகளில்

உடலழகைக்

கோடிக் கண்களுக்குப் படையலாக்கும்

அழகிப் போட்டிக்கும்

பெண்பார்க்கும் படலத்துக்கும்

வித்தியாச விகிதம்

குறைவுதான் சரஸ்வதி

வருவார்கள் புசிப்பார்கள்

பார்வைக்கு உன்னையும்

பசிக்கும் உணவையும்

அடுத்த நூற்றாண்டிலாவது

பெண் பார்க்கும் படலம்

மண்மூடிச் சடலமாக வேண்டும். (சூ.வி.வை.ப.31)

என்று ஆசிரியர் கண்முன்னே நிகழும் பெண்பார்க்கும் படலமான சமூக அவலங்களுக்கு மாற்றம் காண விழைக்கிறார். மேலும், 'தகனம்' புதினத்தில்,

"கந்து வட்டிக்காரன். . . கோலால் தட்டிக் கொண்டே நாக்கைப் பிடுங்குவது மாதிரி கேட்டுக் கொண்டிருந்தான்.

வாசலில் ஏழாங்கல் ஆடின ராணி எழுந்து உள்ளே ஓடினாள்.

காது கொடுத்துக் கேட்க முடியாத அளவுக்கு ஈயம் காய்ச்சி ஊற்றுவது மாதிரியான வசவுகள், . . . திட்டுக்கள். . .ஏசல்கள் அதை வேடிக்கை பார்த்த அக்கம் பக்கத்து ஆட்கள் சின்னஞ்சிறுசுகள் கிழம் கட்டைகள். . .

"த்தூ. . . .நீயெல்லாம் ரோசமுள்ள மனுசனாங்காட்டியும். . ."

இருசப்பனைப் பார்த்து. . . வட்டிக்காரன் துப்பினது, தன் முகத்திலேயே காறி உமிழ்ந்த மாதிரி அதிர்ந்தான் சின்னராசு. (தக.ப.58)

என தகனம், சூ.வி.வை புதினங்களில் சமூக அவலங்களை ஆ.பி. முன்னிறுத்திக் காட்டியுள்ளார்.

## வறுமை நிலை

வறுமை என்பது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைக்கூடப் போதுமான அளவு பெற இயலாத நிலையில் உள்ளவர்கள் எய்துகின்ற நிலையாகும். வறுமை மனிதவாழ்வில் கொடுமையானது. இதனை வள்ளுவர்,

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையின் இன்னாதது"22

என்கிறார். வறுமையை மணிமேகலை,

"குடிப்பிறப்பு அழிக்கும்! விழுப்பம் கொல்லும்!
பிடித்த கல்விப்பெரும் புனை விடூஉம்!
நாணனிகளையும்! மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி!"[23]

எனக் குறிப்பிட்டுள்ளது.

சமூகத்தில் வறுமை மிகக் கொடிய நோய் போல் பரவி வருகிறது.

அடித்தள மக்களான வெட்டியான்கள் வாழ்க்கையில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அடிப்படைத் தேவைகள் சிறிதும் பூர்த்தியடையாத நிலையில் வாழ்கின்றனர்.

ஒவ்வொரு மனிதருக்கும் இறப்பு என்பது துயரச் செய்தி ஆகும். இறந்தவர்களின் குடும்பத்தை மட்டுமின்றி பிறரையும் பாதிக்கக்கூடியது

ஆகும். ஆனால், பலரது இறப்புக்களே வெட்டியான்தொழில் செய்பவர்களுக்கு வறுமையைப் போக்கி வாழ்வளிக்கிறது.

பிணம் எரிக்கும் தொழிலில் கிடைக்கும் குறைவான ஊதியத்தால் ஒரு வேளை உணவுகூட வயிறார உண்ண இயலவில்லை. ஒருவேளைச் சோற்றுக்கும், ஒருவாய்த் தேனீருக்கும் ஒரு சடலத்தின் வருகைக்காகத் தவமிருக்கின்றனர். பிணத்திற்கு இடப்படும் வாய்க்கரிசி தான் இவர்களுக்கு உணவாகின்றது. நிரந்தர வருமானம் இன்றி, அன்றாட உணவுக்கே அலைக்கழிக்கப்படும் நிலை,

"இப்பப் பரவாயில்ல, பெரிசு எரிக்க நானூறு
ரூவாக்கூலி, வரட்டி, கெரசின், கட்டை
யெல்லாம் போவநூத்தம்பது ரூவாயாச்சும்
கைல நிக்கும். . .இந்த வார ரேசனுக்காச்சு. . . .
விரலை மடக்கிக் கணக்குப் போட்டாள்
சின்னப் பொண்ணு வறுமை . . .மரணத்திலும்
லாபம் பார்க்க வைத்தது. (தக.ப.14)

என்றும்,

"மணியிடம் அம்மாதான் சொல்லி
விட்டிருக்கிறாள்.
வாய்க்கரிசி வந்தால்தான் வயிற்றுக்குக் கஞ்சி. . ."(தக.ப.6)

என்றும்,

இவர்கள் பெரும்பாலும் உயர் சாதியினரின் நிலத்தில் தற்காலிகமாக குடிசை வீட்டில் தங்கியுள்ளனர். சில இடங்களில் ஊரின் ஒதுக்குப்புறத்தில் சேரிகளில் வாழ்ந்து வருகின்றனர். அங்கு சாக்கடை

தேங்கி கொசுத் தொல்லையினால் அவதிப்படுகின்றனர். சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளன. பிற அடிப்படை வசதிகள் அனைத்தும் மறுக்கப்பட்ட நிலைமையில் வாழ்கின்றனர்.

“ம். . .பசிமயக்கம். . . கஞ்சி ஊத்தப் பொட்டு அரிசியில்ல. . . குருணையில்ல. . .பெருசுங்க பசி தாங்கலாம். . .சிறுசுக என்ன பண்ண. . .? மயக்கமாயிட்டாங்க.’” (தக.ப.27) என்றும் ஆசிரியர் ‘தகனம்’ புதினத்தில் வறுமையைச் சித்திரித்துக் காட்டியுள்ளார். ‘கதா’ புதினத்தில் வறுமையை,

“இப்ப எங்களோடவே தங்கிட்டால் அப்பா, தங்கை, நான் இதோட நாலாவது வயிறா அவளுக்கும் சேர்த்துச் சோறு போடணும். வீட்டுல நிதி நிலைமை அவ்வளவு நல்லாயில்லியே. . .” (கதா. ப.2)

என்று கூறும் போதே.

வீட்டிலே அப்பாவோடயும். உன்னோடயும் உக்காந்து பழைய சாதம் சாப்பிடறதிலே இருக்கற மகிழ்ச்சி வேற எங்க போனாலும் கிடைக்காதுக்கா.’’ (கதா.ப.19)

என்பதிலிருந்து மறுக்கப்பட்ட வேலியை ஆ.பி. முன் வைக்கிறார். மேலும், ‘சூ.விஇவை’ புதினத்தில்,

“ஐந்து வயசுக் குருத்தை
அந்தமொட்டு தூக்கி
இடுப்பில் நட்டு வைத்தாள்
நழுவி ஓடிய பாவாடையின்
நாடாவை இறுக்கி
இடுப்போடு கட்டிவைத்தாள்
மேல் சட்டை இல்லாதது பற்றி

வறுமை சட்டை செய்யவிடவில்லை''. (சூ.வி.வை.ப.35)

“அது கையகலக் குடிசை
சுற்றுச் சுவரில்
மட்டுமில்லை
கூரையெல்லாம்கூட
ஓராயிரம் சன்னல்
இலவச விளக்குகளாய்ச்
சூரிய, சந்திர நட்சத்திரங்களின்
நித்தியக் கூரை உலா
கைது பண்ணக் கதவில்லாமல்
காற்று சுற்றிச் சுற்றி வந்தது.'' (சூ.வி.வை. ப.72)

“சௌக்கியமா சங்கரம்மா. . .?''
ஏழைக் கேதும்மா சவுக்கியம்?
பசி, பட்டினி, பஞ்சம் இப்படி
ருசியில்லாத வாழ்க்கை. . .''
புலம்பலைத் தவிர
வேறு மொழி அறியாதவளின்
வறுமைப் பேச்சு
வெறுமை மூச்சு'' (சூ.வி.வை.ப.72)

உரையாடலில் வறுமையை மிளிரச் செய்துள்ளார். ‘சாருலதா’ புதினத்தில்,

“இந்த முறை ரேஷனில் அரிசி, கோதுமை, சர்க்கரை வாங்கத் தவறினால் அடுத்த மாசம் வரைக்கும் தட்டுப்பாட்டிலேயே நாளைக் கடத்தியாக வேண்டும்.

காலை காப்பி கட் ஆகும்.

எண்ணெய் இல்லாத உப்புமாவும் தண்ணீராய் ஓடும் மோரும் தான் சாப்பாடு என்றாகும்.'' (சாரு.ப.10)

“ம்? கடைசி மூச்சு வரைக்கும் எனக்குப் புழுக்கை நார்த்தை ஊறுகாயும் புளிச்ச மோரும் தான் சாஸ்வதம். . .எனக்குக் கவலையில்லை. உன் தங்கச்சிங்க மூணும் விவரம் புரியாததுங்க. இல்லாமை புரிய மாட்டேங்குது. வறுமை புரியமாட்டேங்குது. பணத்தில ஈர்ப்பு அவங்களைத் தடம்மாற வைக்கக் கூடாதே. . . அதான் பயமாயிருக்கு. . .''(சாரு.ப.27)

ஊறுகாய் ஜாடியிலிருந்த கடைசித் துண்டு ஊறுகாயைக் கடித்துக் கொண்டு மோர் சாதத்தை முடித்தாள் கமலா.

உருட்டிச் சாப்பிடவும் முடியாமல் கஞ்சியாய்க் கரைத்துக் குடிக்கவும். முடியாமல் ரெண்டும் கெட்டானாய் இருந்தது அந்த மோர் சாதம். (சாரு.ப.27)

“நிஜத்தைச் சொல்லவா? இதுவரைக்கும் நாங்க அதிகமாய்ச் சாப்பிட்ட ஐட்டம் எது தெரியுமா? தண்ணிதான். . .''

சாருவின் குரலில் விரக்தி தெறித்தது'' (சாரு.ப.47)

என ஆசிரியர் வறுமையை மிக அழகாகப் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

வறுமையும், பெண்களும் நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றோ என்னவோ, எந்தவொரு படைப்புகளிலும் வறுமை என்றால் பெண்கள்தான் என்னும் அளவிற்கு அவர்கள் வறுமையோடு இரண்டறக் கலந்து படும் துன்பங்களைப் பல படைப்பாளர்கள் தங்களுடைய படைப்புகளில் பதிவுசெய்துள்ளனர்.

‘ஆ.பி’யும் இதற்கு விதிவிலக்கல்ல. தன்னுடைய தகனம், சாருலதா, கதாநாயகி, சூ.வி.வை, தா.த.தா, உ.ஆ ஆகிய புதினங்களில் வறுமையையும் பெண்களின் நிலையையும் மிக அழகாக சித்திரித்துக் காட்டியுள்ளார்.

## வறுமையின் பாதிப்பு

ஏழைப் பெண்கள் வறுமையினால் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இதனால், அவர்கள் தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்காக வறுமையினால் வாடும் பெண்கள் பல வேலைகளில் ஈடுபடுகின்றனர். அதனால், அவர்கள் பல சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். வயிற்றுப்பிழைப்புக்காக வேலைக்கு வரும் பணி மகளிர் ஒருசார் பணியகத்து ஆடவரால் போகப் பொருளாகக் கருதப்பட்டு மனத்தால், பேச்சால், கண்களால் மானபங்கம் செய்யப்படுவதைப் பார்வதி அம்மாள் மூலம் ‘சூர’ புதினத்தில் பின்வருமாறு ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

“அனாதை பதினாறு வயசு இளமை, படிப்பில்லை, வயிற்றுப் பாட்டுக்காகப் பண்ணையார் வயலில் கூலி வேல”. (சூர.ப.84)

வயிற்றுப் பிழைப்புக்காக வேலைக்கு வரும் பெண்களையும் விலை மாதர்களாகக் கருதித் தம் பெண்மையை விலை பேச வந்ததாக ஆடவர் எண்ணும் சூழலை ‘வி.நே.’ புதினத்தில்,

“குட்டக்குட்ட ஓரளவுக்குத் தான்குனிய முடியும் ஸார். . .வயித்துப் பொழைப்புக்காக வேலைக்கு வர்ற பொண்ணுங்களையெல்லாம் சொடக்குப் போட்டுக் கூப்பிடலாம்னு நெனைக்காதிங்க”[9] (விடியும் நேரம், ப.4) என்று ஆண்களினால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும்

வேலைக்குச் செல்லும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் விஜயா என்னும் பாத்திரம் மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளார். மேலும், வறுமையின் பொருட்டு வேலைக்குச் செல்லும் பெண்களின் உடல்உழைப்பு ஆண்களால் அன்றியும் பெண்களாலும் சுரண்டப்படுகிறது. அதனால் பெண்கள் பல சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும் ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆண்கள் பொருளீட்டாத காரணத்தாலும் குடும்ப பொறுப்பு இல்லாத காரணத்தாலும் பெண்கள் வறுமையின் பாதிப்புக்கு உள்ளாவதை

“உ.ஆ’ புதினத்தில் அன்னபூரணி என்னும் பாத்திரம் வழி பின்வருமாறு ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

“வாடகை தராம – குருவி வயத்துல குஞ்சு வசிக்குதுன்னு அம்மாட்ட சொல்லுங்க. . .வீட்டுக்காரம்மாவுக்கு வாடகை பாக்கின்னு சொல்ல வேணாம். . .சரியா. . . ?”[11] (உ.ஆ.ப.116)

பெண்கள் போகப்பொருளாகவும், மோகப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் வறுமையின் பொருட்டு வேலை செய்யும் பெண்களை ஆண்கள் பாலியல் கண்ணோட்டத்துடனே பார்க்கின்றனர் என்றும் ஆசிரியரின் கதைகள்வழி அறிய முடிகிறது.

## வறுமையில் செம்மை

பெண்கள் ஆண் துணையின்றி தனித்து வாழ்ந்தால் சமூகத்தினர் பார்வை தவறாக அமைவது இயற்கை. உழைப்பைத் தவிர வேறெதையும் மூலதனமாகப் பெற்றிராத அவர்கள் சிறிது சபலப்பட்டாலும் அவர்களுடைய வாழ்க்கை முறையேமாறிவிடும். ஆனால், சின்னப் பொண்ணுவோ வறுமை நிலைக்குப் பயந்து பின் வாங்காமல் ஒரு ஆணாகத்தன் தந்தை செய்த

குலத் தொழிலான பிணம் எரிக்கும் தொழிலை செய்யத் துணிகிறாள். வரதட்சிணைக் கொடுமையால் இறந்து புதைக்கப்பட்ட பெண்ணின் உடலை காவல்துறை விசாரணைக்காக மீண்டும் தோண்ட வேண்டிய நிலையில் ஆண் வெட்டியான்கள் எல்லாரும் பின்வாங்கி தப்பித்துக் கொள்ள, கடுமையான மழையையும் பொருட்படுத்தாது அப்பணியில் ஈடுபடுகிறாள் சின்னப்பொண்ணு. அதனைக் க்ணட ஒரு காவலர், “ஒரு காவலரான எனக்கே நாற்றம் பொறுக்க முடியலில்லை. நீ எப்படித்தாங்குகிறாய்? வேறு ஏதாவது வேலைக்குச் செல்லக்கூடாதா? என வினவுகிறார். அதற்கு, “அட. . .இன்னா சார் நீங்க? இந்த நாத்தம் தான் சோறு போடுது. எங்களுக்குப் பசியும், பட்டினியும் குடலைத் தின்னுச்சுன்னா என்ன தொழிலு வேணாம் பண்ணலாம். கொலைக்குத்தம், திருட்டு, அவுசாரி இதெல்லாம்தான் நாறத் தொளிலு. இது புண்ணியத் தொழிலு என்னா கொஞ்சம் அசிங்கம் பார்க்காமப் பண்ணனும் அம்புட்டுத்தான்.” (தக.ப.84)

என்ற சின்னப்பொண்ணுவின் பதில்மொழி அவளது செம்மையான வாழ்வியல் முறையைக் காட்டுவதாய் அமைகிறது.

## உணவும் உடையும்

உணவு என்பது மனிதர்க்கு மட்டுமல்லாது விலங்குகள், தாவரங்கள் ஆகிய அனைத்திற்கும் தேவையான ஒன்று.

“பசி என்பது ஓர் உயிரியல் நிகழ்வு. இது ஓரணு உயிரியான அமீபா முதல் படிமலர்ச்சியின் உச்ச நிலையில் இருக்கும் மனிதன் வரை அனைத்து உயிரினங்களிலும் நிகழ்கிறது. இந்த இயற்கை நிகழ்வு ஏற்படும் போது ஒவ்வொரு உயிரினமும் அதற்கு ஏற்ற எரிபொருளை உட்கொள்ள வேண்டியிருக்கிறது”[24] என்பார் பக்தவச்சல பாரதி.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் ஆகும். உணவு வகைகளும், படைக்கும் இயல்புகளும், உணவு உண்ணும் முறையும் வட்டாரத்திற்குரிய தனிப்பாங்கினைப் புலப்படுத்தும்.

மனிதனின் அன்றாட வாழ்வில் உணவும் உடையும் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. மனிதனின் அடிப்படைத் தேவையாக உணவு, உடை, உறையுள் என்ற மூன்றையும் குறிப்பிடுவர். உணவில்லை என்றால் உயிர் வாழ முடியாது. உடை இல்லை என்றால் மானம் காக்க முடியாது.ஆகவே உணவும் உடையும் இன்றியமையாததாகிறது.

சாருலதாவில் காட்டப்படுகின்ற உணவு முறையானது, நடுத்தர மக்களின் உணவும், உடைகளும் எவ்வாறு அமைகிறதோ அதை அப்படியே அமைத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

சாருலதாவின் வீட்டில் காலையில் பழையது மத்தியானம் நீர்த்த மோர்சாதம் இரவில் ரசம்சாதம் இப்படி சாப்பிடும் முறையையும் அவளின் நண்பர்கள் உணவு முறையான பாதாம்பருப்பு பிஸ்தாவும், பாலுமாய்ச் சேர்த்து குடிக்கும் முறையையும் கூறுகின்றார். மேலும், அன்றாடம் வழக்கமான காப்பியும் பிஸ்கட் வகையும் உணவு முறையாகக் காட்டப்படுகிறது.

‘கானல் சொர்க்கத்தில்’ உணவு முறையானது தமிழ்நாட்டு மரபுப் படியே அமைகிறது. தமிழ் மக்கள் அன்றாட உணவு வகைகளைப் பயன்படுத்தி வந்த மரபு புலப்படுகின்றவாறு ஆசிரியர் நாவலில் காட்டியுள்ளார். ராதாவும் மனோவும் மேலை நாட்டு உணவு வகைகளாகிய

ஐஸ்கிரீம், பெப்சி போன்ற குளிர்பானங்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததையும் ஆசிரியர் காட்டியுள்ளார்.

தமிழ் மரபு படியே உடைகளை அணியும்படி மனோகர் ராதாவை வற்புறுத்தி, அதுவே எனக்கு மிகவும் பிடிக்கும் என்று கூறுகின்றான். அவளும் அவனின் விருப்பப்படியே நடந்து கொள்கிறாள்.

புதினங்களில் வரும் மற்ற நபர்களும் தமிழ் மரபினை பின்பற்றியதாக ஆசிரியர் காட்டியுள்ளார்.

"கமலாவுக்கும் ராஜாங்கத்துக்கும் ராஜமரியாதைதான் உட்கார்த்தி வைத்து நாலு பசங்களும் பொரியல், கூட்டு, அவியல், பச்சடி, இனிப்பு, பாயாசம், ஐஸ்கிரீம், பீடா என்று பரிமாறித் தள்ளிவிட்டார்கள். . . "(சி.சி.எ.ப.148)

எனும் வரிகள் பிரபாவின் மாமியாருக்கும், மாமனாருக்கும் ரிஷி உணவுவிட்டு உபசரித்ததைக் காட்டுகிறது.

'கா.சொ' புதினத்தில்,

"சந்தியா. . .பேசி முடிச்சியா. . .?" குழம்பு சாதத்தைப் பிசைந்து சாப்பிட்டபடியே கேட்டான், வெங்கடேஸ்வரன்.

"ம். . .ஒத்துக்கிட்டாரு. . . "

கத்திரிக்காய்ப் பொரியலைச் சுவைத்த சந்தியா சொன்னாள்.

(கா.சொ.பக்.95-96)

என்றவாறு சந்தியா வெங்கடேஸ்வரன் உரையாடல் இடையே உணவு வகைகளும் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

தா.த.தா. புதினத்தில்,

"நேற்று இட்லிமாவு அரைத்து வைத்தது வசதியாயிருந்தது.

வெங்காயம் நிறையப் போட்டு சாம்பார் செய்து. . .நல்லெண்ணெய் ஊற்றி மிளகாய்ப்பொடியும் தொட்டுக் கொண்டு. . .சுடச்சுட இட்லியை மெதுவாய்... நிதானமாய். . .ருசித்துச் சாப்பிட ஆரம்பித்தார்கள். . .”(தா.த.தா.ப.35)

எனும் வரிகள் வாயிலாக, ஜெயாவும், அவளது கணவன் கார்த்திக்கும் பல்வேறு அலுவல்களுக்கிடையும், வறுமையிலும், விடுமுறை அன்று சமைத்த உணவை ருசித்து விரும்பிச் சாப்பிடுவதை ஆசிரியர் மிக அழகாகப் பதிவு செய்துள்ளார்.

இதனைப் போன்று ‘சூ.வி.வை’, ‘தகனம்’, ‘சு.பி.வீ’ போன்ற புதினங்களிலும் உணவு பற்றிய செய்தி இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

### பிண மெரிப்பவர்களின் வாழிடம்

தகனம் புதினத்தில் தாழாங்குப்பம் என்ற பிணமெரிக்கும் நபர்கள் வாழும் இடத்தை ஆண்டாள் பிரியதர்ஷினி குறிப்பிடும்போது,

“நாற்றமடிக்கும் கூவத்தின் தொடர்ச்சி ஒரு பக்கம். . .பொது கைபம்பில் துணி துவைத்து, பாத்திரம் கழுவி, தேங்கிய தண்ணீர்க் குட்டையாய் வழிந்து நிற்க, அதில் மொத்தக் குத்தகையாகக் கொசுப்பட்டாளம்” (த. ப.21)

என வருணிக்கிறார். ஒடுக்கப்பட்ட இனமான பிணமெரிப்பவர்களை இந்த சமூகம் ஊருக்கு அப்பால் ஒதுக்கியே வைத்திருக்கிறது. ஒரு குறுகிய இடத்தில் இவர்களைப் போன்றோர்கள் வாழ்கின்ற போது அங்கு சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. நாய்களோடும், பன்றிகளோடும், கொசுக்களோடும்

துர்நாற்றத்திலும் சேறு சகதியிலும் வாழ நேரிடுகிறது. இவர்களின் வாழ்வு நோயிலும், வேதனையிலும் கழிகிறது.

## விருந்தோம்பல்

விருந்து என்பது ஒரு சமுதாயப் பண்பாட்டைப் போற்றி, அவர்களின் மரபுநிலையை உற்றார், உறவினர் நண்பர்களைச் சேர்த்து அவர்களுக்கு உணவு கொடுப்பதையும் விருந்து என்கிறோம். விருந்தோம்பலினால் வீட்டில் சிறந்த பண்புகள் வாய்ந்தவர்களாக விளங்குகின்றனர்.

‘சாருலதா’வில் பெரிய செல்வந்தரின் வீட்டில் எப்படி விருந்து உபசரிப்பு நடைபெறுமோ அதேபோல் சாருவை அழைத்து, பிரேம்குமாரும், காஞ்சனாவும் பல்வேறு வகையான உணவுகளை அளிப்பதாக தரப்பட்டுள்ளது.

“மேஜையில் எத்தனை எத்தனை விதமாக பதார்த்தங்கள்.... இனிப்புகள். . .காரங்கள். . . .சூப்புகள். . .ஜூஸ். . .ஜாங்கிரீம் வகைகள் வாழைப்பழம், ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, மாம்பழம், பலாச்சுளை இதெல்லாம் நீள் வட்டமான வெள்ளிப் பேழைகளில். . .ம் ம். . .இது வெஜிடபிள் புலவு. . பாதாம்பாயசம். . .முந்திரி, ஊத்தாப்பம். . .பைன் ஆப்பிள் ஜூஸ். . .(சா., ப.31) போன்ற வகையான உணவுகள் விருந்தளிப்பதாக புதினத்தில் அமைகிறது.

சாருவை பெண் கேட்பதற்கு பிரேம்குமாரும் காஞ்சனாவும், சாருலதா வீட்டிற்கு வந்திருக்கும்போது கமலாவின் விருந்து உபசரிப்புமுறையையும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

## பொழுது போக்கு

வாழ்நாளில் வேலை செய்த நேரத்தைத் தவிர மற்ற நேரங்களை எல்லாம் பொழுதுபோக்காக நினைக்கிறார்கள். மனித சமுதாயத்தில் சிலரது வாழ்வில் பொழுது போக்கிற்கு நேரமே இருப்பதில்லை. அதே போல் வாழ்நாளில் எல்லா நேரத்தையும் பொழுதுபோக்காகவே கழிக்கும் மனிதர்கள் இன்று அதிகம். இன்பம், துன்பம் உலகம் எல்லாமே திரைப்படத்திலும், தொலைக்காட்சியிலும் அடங்கி விடுகின்றது என்று ஒரு குறிப்பிட்ட சமுதாயம் நினைத்து போலித்தனமான வாழ்வை வாழ்கிறது. நிஜ வாழ்வை மறந்து விட்டது.

பொழுதுபோக்கு அம்சங்கள் எல்லோர் வாழ்விலும் அமைவது உண்டு. அதில் அவரவர் வசதிக்கு ஏற்றவண்ணமும், விருப்பத்திற்கு ஏற்றமுறையிலும் அமைகிறது.

சாருலதா, பிரேம்குமார், காஞ்சனா போன்றவர்கள் மனம்விட்டு பேசுவதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் கடற்கரைக்குச் செல்கின்றனர். அங்கு வெகு நேரமாக மனம்விட்டுப் பேசிப் பொழுதினையும் கழித்து வருவதாக அமைகிறது. ‘கானல் சொர்க்கம்’ புதினத்தில் பொழுதுபோக்கு முறைகளானது நாவலின் ஆரம்ப நிலையிலிருந்து, முடியும்வரையிலும் அளவுக்கு அதிகமாகவே காணப்படுகின்றது. ஆனால் புதினத்தில் காட்டப்படும் எல்லா கதைமாந்தர்களும் பொழுதுபோக்கு முறையைக் கையாள்வதாகக் காணப்படவில்லை. கல்லூரிக்குச் சென்ற ராதா, கல்லூரி வகுப்பிற்குப் போகாமல் மனோகருடன் சேர்ந்து, காதல் என்ற பேரில் திரைப்படம், உணவு விடுதிகள் இப்படி தனது பொழுதினைப் போக்குவதாக

ஆசிரியர் குறிப்பிடுகிறார். இளம் வயதில் என்ன பண்ணுகிறோம், எதைப் பேசுகின்றோம் என்றுகூடத் தெரியாமல்,

"சினிமால்லாம் ஆறுமணி நேரத்துக்குப் பார்க்கற மாதிரி நீளமாய் இருக்கணும் ராதா. . . வாழ்க்கை முழுதுமே இப்படி இருந்திடலாமா ராதா? சோறு தண்ணி எதுவுமே வேணாம். உன் பக்கத்திலே நான். . .என் பக்கத்திலே நீ . . . என் மூச்சை நீ சுவாசிக்கனும். . . உன் மூச்சுக்காற்றை நான் சுவாசிக்கனும். . .சொர்க்கமாயிருக்கும்டா ராதா. . ." (கா.சொ. ப.79)

என்று திரை அரங்குகளில் உட்கார்ந்து கொண்டு உரையாடுவதை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகின்றார். அவர்கள் மாமல்லபுரத்திற்குச் சுற்றுப்பயணமாகவும் பொழுதுபோக்கிற்காகவும் சென்று வந்த கோலத்தையும் கதையில் எடுத்துரைக்கின்றார்.

இதனைப் போன்று 'வே.ம.' புதினத்திலும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் சில இடம் பெற்றுள்ளன.

## வழிபாட்டு முறை

தெய்வத்தின் மீதான நம்பிக்கையை வைத்து மக்கள் வழிபாடுகளை நடத்துகின்றனர். அப்படி வழிபாடு நடத்துவதால் அவர்கள் நினைத்தபடியே சில காரியங்களும் நடந்து விடுகிறது. அதனால் காணிக்கை என்ற பெயரில் தெய்வத்திற்கு முடிந்த உதவிகளைச் செய்கின்றனர். வழிபாட்டு முறையை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

1. கோயிலுக்குச் சென்று தெய்வத்தை வணங்கும் முறை.
2. தான் நின்ற இடத்திலிருந்துகொண்டே தெய்வத்தை வழிபடுவது என பிரித்துக் காட்டலாம்.

‘கா.சொ.’ புதினத்தில், தெய்வத்தை வணங்குவதற்காகவும், பொழுது போக்கிற்காகவும் ராதாவும், மனோவும் மாமல்லபுரத்திற்குச் சென்றுள்ளார்கள். அந்த நேரத்தில் சந்தியாவும், வெங்கடேஸ்வரனும் ராதாவைப் பெண் பார்க்க வரச்சொல்லி மாப்பிள்ளை வீட்டாரும் வந்து காத்திருக்கின்றனர். அப்போது, சந்தியா பல தெய்வங்களை வழிபடுவதாக புதினம் அமைந்துள்ளது.

கோயிலுக்குச் சென்று, தெய்வத்தை வணங்கும் முதலாவது வழிபாட்டு முறையை, ‘வி.நே’, ‘விலை’, ‘சு.பி.வீ’ போன்ற புதினங்களில் காணமுடிகிறது.

“ஏழுமலையானே, எம்பொண்ணுக்கு நல்ல புத்தி குடுப்பா.... அவமூலமா எங்களுக்கு விடியவை. (சாரு.ப.8) எனச் சாருவின் தாய் வழிபடுவதை அறியமுடிகிறது.

“நல்லபடியாய் அவர்களுக்கு புத்தி குடு கடவுளே. . .ஏடா கூடமாய் ஏதாச்சும் பண்ணிடாம ஒழுங்கா வீடு வந்து சேரணும். இந்தக் குடும்பத்துக்கு வேற அவமானம் எதுவும் நேராமல் காப்பாத்து எனப் பிராத்தனை செய்து என்ன பிரயோசனம்? (கா.சொ.ப.105)

என, ஆசிரியர் வழிபாடு முறை அமைந்த பாங்கினைப் பதிவு செய்துள்ளார்.

## தொழிலாளர்கள் நிலை

உழைக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கமே சமுதாயத்தை இயக்கும் சக்தியாகத் திகழவேண்டும் என்பது மார்க்சியக் கொள்கை. இந்தியத் தொழிலாளியின்நிலை மிகவும் தாழ்நிலையில் காணப்படுகிறது. உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை சமுதாயத்தில் சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகிறது. என்கிறார் ஆசிரியர்.

‘தகனம்’ புதினத்தில் வெட்டியான் இனச் சிறுவர்கள் படிக்கச் செல்லாமல் குடும்பச்சூழலின், காரணமாக வறுமையால் இடுகாட்டுத்தொழில் செய்யச் செல்கின்றனர். இதனால், அவர்களிடையே படிப்பறிவற்ற தன்மையும் காணப்படுகிறது. குழந்தைகள் தன் சக்திக்கு அதிகமாக வேலை செய்கின்றனர். இப்புதினத்தில் வெட்டியான்வேலை செய்யும் தொழிலாளர்கள்நிலை தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. அவர்களுக்கு வேலை வரிசை முறையில் கொடுக்கப்படுகிறது. நிரந்தரமான ஊதியம் கிடையாது. உடல் நிலை சரியில்லை என்று அவ்வேலையைச் செய்யாவிட்டால் வறுமையில் வாட வேண்டிய நிலை தான். பணம் படைத்தவர்கள் முறைகேடாகப் பிணங்களை எரிக்கச் சொல்லும்போது காவலர்களும் துணை போகின்றனர். அவர்களால் பாதிப்பு ஏற்பட்டபோதும், சிதை நெருப்பால் பாதிப்படைந்த போதும்,

அரசு உதவி செய்ய முன்வருவதில்லை என்பதை,

“தெனமும் அஞ்சாறு பொணமாவது
விளுந்தாத்தான் எங்களுக்கு நல்லது
விழணும்னு வேண்டிட்டுத்தான்
கண்ணு முழிக்கோம். கார்ப்பரேசன்லே
ருந்து நாலு காசு சம்பளத்த மாசாமாசம்
குடுக்கச் சொல்லு சாரு. அப்புறம்
நாங்க ஏன் வாய்க்கரிசிக்கு
அலையறோம்? வேலைக்குச் சுணங்கறோம். . .?” (தக.ப.132)

என்று வெட்டியான்தொழில் செய்பவர்களின் நிலையை ஆசிரியர் அழகாக விளக்கியுள்ளார்.

“சரியா வேலை பண்ணுங்க. . .இல்லன்னா உங்களையும் சேர்த்து எரிச்சுடுவேன். . . ஜாக்கிரதை”.

“கட்சிக்காரன், அதிகாரிங்க வீட்டுப் பொணம்லாம் வேணாம் சார். ஐயாவுக்குத் தெரிஞ்சடெத்துன்னு காசே குடுக்காம நழுவிடுவானுவ... மண்ணெண்ணெய் ஊத்தி வறாட்டி அடுக்கி வச்சு ராவாப் பகலா நின்னு பொணத்தை எரிக்கறதுள்ளாத நாங்க உசிரோட எரிஞ்சு போறோம். இவனுங்க குடுக்கற பிச்சைக்காசு பத்துக்கும், இருபதுக்கும் உசிரைக்குடுத்து தொழில் பண்றோம் நாங்க. . .”(தக.ப.131)

என்ற வரிகள்வழி சுடுகாட்டில் அலுவலர் படுத்தும் கொடுமையையும், வெட்டியான் தொழில் இன மக்கள்படும் துன்பங்களையும் நடைமுறையில் இருப்பதை ஆ.பி. பதிவு செய்துள்ளார்.

## வெட்டியான் தொழில்

மனித வாழ்வின் இறுதிப் பயணம் நிகழுமிடம் மயானம். பெயரினை நீக்கிப் பிணம் என்று பெயரிடப்படும் மனித உடல்களை மண்ணோடு மண்ணாக மறையச் செய்யும் பணியைச் செய்பவர்கள் வெட்டியான்கள். அத்தகு தொழிலில் உள்ள இன்னல்கள் பல. எத்தனையோ தேவை இல்லாத செலவுகளை எல்லாம் செய்யும் மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யும் வெட்டியான்களுக்குப் போதிய கூலி கொடுப்பதற்கு மனமில்லாதவர்களாக உள்ளதைக் காணமுடிகிறது. மழையென்றும், வெயிலென்றும் பாராமல் இறந்த உடல்களை எரிக்கும் அவர்களுடைய வாழ்வின் அவலத்தை ஆண்டாள் பிரியதர்ஷினி உள்ளது உள்ளவாறே புனைந்துள்ளார். வெட்டியான்தொழில் செய்த தனது தந்தை, புத்தி பேதலித்து எங்கோ கண்காணாமல் சென்றுவிட, தனது தாய் இரு

சகோதரிகள் ஆகியோரைப் பாதுகாக்கவேண்டி தனது தந்தையின் தொழிலான வெட்டியான் தொழிலில் ஈடுபடுகிறாள் சின்னப்பொண்ணு. இன்று பெண்கள் முன்னேற்றம் பெற்று எத்தனையோ பணிகளில் ஆண்களுக்கு நிகராகச் சாதனை புரிகின்றனர். ஆட்டோ ஓட்டுநர், பேருந்து ஓட்டுநர், விமான ஓட்டுநர், காவல்துறை, இராணுவம் பல்வேறு அலுவலகப் பணிகள், அறிவியல் துறைகள் என்றெல்லாம் பெண்கள் அனைத்துத் தொழிலையும் உவந்து செய்வதைக் காணமுடிகிறது. அவ்வகையில் இதுவரை ஆண்கள் மட்டுமே செய்து வந்த பிணமெரிக்கும் தொழிலைப் பிழைப்புக்காகச் செய்யத் துணிகிறாள் சின்னப் பொண்ணு.

"இப்பப் பரவாயில்ல பெரிசு எரிக்க நானூறு ரூவாக்கூலி வரட்டி, கெரசின், கட்டையெல்லாம் போவ நூத்தம்பது ரூவாயாச்சும் கைய்நிக்கும். இந்த வார ரேசனுக்காச்சு. . .விரலை மடக்கிக் கணக்குப் போட்டாள் என் சின்னப் பொண்ணு வெட்டியான்தொழிலில் ஈடுபடுவதைக் காட்டுகிறது."

(தகனம், ப.14)

## குழந்தைத் தொழிலாளர்கள்

சமூகத்தில் நிலவும் வறுமை, குழந்தைகளையும் பாதிப்பதால் குழந்தைத் தொழிலாளர் என்ற ஒரு புதிய தொழிலாளர் பிரிவு தோன்றுவதைப் பாப்பா பாட்டில் பாரதியார்,

"சின்னஞ்சிறு குருவி போல நீ
திரிந்து பறந்து வா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா"[25].

என்கிறார். இக்கருத்து இன்றைய சூழ்நிலையில் வறுமையால் வாடும் குழந்தைத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் பொருந்தாமல் போவதை அறிய முடிகின்றது. கல்யாண்ஜி.

“ஊமைப்பையனை
வேலையில் சேர்த்து
அளவில் பெரிய
பழைய பனியனை
அவனுக்கு மாட்டி
ஏவி மேய்த்துச்
சந்தோஷப்படுகிற
டீக்கடை பாய்.”[26]

என்று கூறுகின்றார். ஆண்டாள் பிரியதர்ஷினி ‘தகனம்’ புதினத்தில் குழந்தைத் தொழிலாளரைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது,

“இந்தாண்ணே ஒரு வாய் தின்னு. . . நெய்வாசம். . .” மைசூர்பாகை நீட்டினான். குச்சி குச்சியாய்க் கைகள், மெல்லிய கால்கள், ஒட்டிய கன்னத்தில் தெறித்து விழும்படிக் கண்கள். கிழிஞ்ச டிராயர், சட்டை. பக்கத்து வீட்டுப் பையன். பள்ளிக்கூடம் படிப்பு எதுவும் கிடையாது. இந்த வயசிலேயே குலத் தொழில்”

(தகனம்., ப.6)

என்று கூறுகின்றார். மேலும்,

“ஓ. . . ஓ. . .ஆ . . .ஆ. . .அம்மா ஓடியா. . . பொண்ணுக்கா ஓடியா. . .ஐயோ எரியுதே. . .எரியுதே. . .ஓடியாக்கா. . .ஐயோ கண்ணு. . .”

“ஐயோ எரியுதே கண்ணு. . .அவிஞ்சு போச்சே. . .கண்ணு எரியுதுக்கா. . .உசிர் போவுது. . .”

நடுவிரல் அளவுக்கு தடித்த கண்ணாடித் துண்டு கண்ணைக் கிழித்துச் சொருகி நின்றிருந்தது. கண்ணை இமைக்க முடியாமல் கொட்டும் ரத்தத்தை நிறுத்த முடியாமல் துடித்தான் கதறினான்.

“போச்சு. . .இனிநா குருடு தான். ஒத்தக் கண்ணுதான்”.

(தகனம். பக்.135-136)

குலத்தொழிலால் சிறுவயதிலேயே புத்தி பேதலிச்சு போன சுரேசு, சிறுவயதிலேயே கண் பார்வையை இழந்த சம்பத்து ஆகிய குழந்தைத் தொழிலாளர்கள் படும் அவல நிலையை ஆசிரியர் ‘தகனம்’ புதினத்தில் மிக அழகாக சுட்டிக் காட்டியுள்ளார். இதன்வழி குழந்தைகளைத் தொழிலாளர்களாகப் பயன்படுத்துதலைத் தவிர்க்க வேண்டும் என ஆசிரியர் விரும்புகிறார்.

## தொழில் சிரமங்கள்

தொழிலில் ஏற்படக்கூடிய சிக்கல்களை, ஆ.பி., நுட்பமாகத் தன்னுடைய புதினங்களில் எடுத்துக்கூறியுள்ளார். இரவு நேரத்தில் இடுகாட்டின் பக்கம் போவதற்கு அஞ்சுவர் பெண்கள். ஆனால், நேரம் காலம் பார்க்காமல் பிணங்களுடன் போராடுகிறாள் சின்னப்பொண்ணு. இயல்பாக பெண்களுக்கு இயற்கைத் துன்பமானமாத விலக்குக்காலங்களில் ஏற்படும் உடல் உபாதைகள் அதிகம். அத்தகு துன்பத்துடன் இரவெல்லாம் கண்விழித்து, பிணம் எரிக்கும்பொழுது சின்னப் பொண்ணு மிகுந்த வேதனைக்கு ஆளாகிறாள். மயானப் புகையைத் தொடர்ந்து சுவாசித்து தொடர் இருமலுக்கு ஆளாகிறாள். காசநோயின் ஆரம்ப அறிகுறிகள்

அவளிடம் தென்படத் தொடங்குகின்றன. ஆண் வெட்டியான்கள் வருமானமுள்ள பிணங்களை மட்டுமே எரிக்க, மருத்துவ மனையிலிருந்து வரும் அனாதைப் பிணங்களை எரிக்க வேண்டிய சூழல் சின்னப்பொண்ணுவிற்கு ஏற்படுகிறது. அவற்றை எரிப்பது மிகுந்த சிரமமாக இருந்த போதும் அதனைச் செவ்வனே செய்கிறாள் சின்னப் பொண்ணு.

“ரெண்டு நாளாய் சோறு தண்ணியில்லாமல் வெறுமனே டீ குடித்துக் குடித்து தம்பிடித்து சடலம் எரித்து முடித்ததில் உடம்பு முழுசும் நாறியது. வியர்வை நாற்றம். சடலத்தில் அழுகிய புழுக்களின் நாற்றம். கூடவே தீட்டு நாற்றம். தீட்டுத் துணியின் நாற்றம். குளிக்கவில்லை. வெளியே போகவில்லை. ரெண்டு துணியைக் கையோடு கொண்டுவந்து இந்தப் புதர்மறைப்பிலேயே மாற்றிக் கொண்டாயிற்று. எழுந்தாள்; நிம்மதியாயிருந்தது. வயிற்றுவலியும் கால்வலியும் பின்னியது.”(தகனம். ப.134)

சின்னப்பொண்ணுவின் வறுமைநிலையில் உடல் துன்பத்தையும் பொருட்படுத்தாது, உழைப்பில் கவனம் செலுத்தும் அவளது உறுதிமிக்க குணத்தை ஒருங்கே வெளிப்படுத்துகிறது, ‘தகனம்’ புதினம்.

மனிதனுக்கு வாழ்வில் கிடைக்கும் இறுதி மரியாதை அவனைத் ‘தகனம்’ செய்தல் ஆகும். இவ்வாறு தகனம் செய்வோர் இறந்தோரைத் தகனம் செய்கின்ற போது பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக நேரிடுகிறது.

பிணத்தினை எரிக்கும்போது உண்டாகும் கொடிய நாற்றம் பல சமயங்களில் பிணம் எரிப்பவரின் மனநிலையைப் பாதித்து அவரை மன நோயாளியாக்கும்.

பிணத்தின்மீது கொழுந்து விட்டு எரியும் தீயானது மனித உடலில் உள்ள கொழுப்பின் காரணமாகத் திடீரெனப் பயங்கரமாக எரியும்.

அப்போது அதிலிருந்து எழும் அனல் பிணம் எரிப்பவரின் கண்களைத் தாக்கலாம்.

பிரேதப் பரிசோதனை முடிந்து மருத்துவமனையில் இருந்து வரும் பிணத்தினுள் உப்பும், பாட்டிலும் வைத்துத் தைப்பார்கள். இந்தப் பிணத்தை எரிக்கும் போது சூட்டினால் பாட்டில் வெடித்துப் பிணமெரிப்பவர் மீது குத்திக் காயத்தை ஏற்படுத்துவது உண்டு.

சில சமூக விரோதிகள் தாங்கள் கொலை செய்த பிணங்களை எரிக்கப் பிணம் எரிப்பவர்களைக் கட்டாயப்படுத்துவது உண்டு. தொடர்ந்து பிணம் எரித்தல் தொழில் செய்ய வரும் நபருக்குக் காசநோய் வரும் அபாயம் உண்டு எனத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் அனைத்தையும் ஆசிரியர் புதினத்தில் சித்திரித்துக் காட்டியுள்ளார். வெட்டியான் என்ற பெயருடன் ஆணுக்கு நிகராகப் பிணம் எரிக்கும் சின்னப்பொண்ணுவை ஆ.பி. முன்னிறுத்தியுள்ளார்.

## வாழ்க்கைப் போராட்டம்

பிணம் எரிக்கும் மக்களின் வாழ்வில் இன்னும் முழுச்சுதந்திரம் மலரவில்லை. ஒரு வேளைச் சோற்றுக்கும் ஒரு வாய்த் தேநீருக்கும்கூட ஒரு சடலத்தின் வருகைக்காகத் தவமிருக்கும் மக்கள் பட்டினியில், வறுமையோடு போராடுவதே இவர்கள் வாழ்க்கை. பிணம் எரிப்பவர்களுக்குத் தரும் கூலிப் பணத்துக்குச் சடலத்தின் முன் பேரம் நடக்கிறது.

இன்னும் அனாதைப் பிணங்களை எரிப்பவர்களின் கதி அதோ கதி தான். சின்னப் பொண்ணு தன் தொழில் பற்றிக் கூறும் போது, “எனக்கு மட்டும் போலீஸ் கேசு, ரயில்பாடி, ஆக்ஸிடெண்டு கேஸீண்ணு, தள்ளி

விடுறாங்க. இந்த அனாதைப் பொணத்தால டீக்கு கூட காசு பெயரமாட்டேங்குது. ஒத்தப் பைசா இல்ல கைல'' (தக.பக்.112-113)

என்று பிணம் எரிப்பவர் வாழ்வின் அவலத்தை ஆ.பி. ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார்.

## கல்வி நிலை

ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது கல்வியாகும்.

கல்வி மனித வாழ்க்கையை வளப்படுத்துவதுடன், பயன்படுத்திய மனிதனை, மனிதனாக வாழவைப்பதாகும்.

'தகனம்' புதினத்தில் கல்வியைப் பெரும்பொருட்டாக மக்கள் கருதவில்லை. அவர்கள் குலத்தொழில் செய்வதையே விரும்பினர். இதனை,

"பள்ளிக்கூடம் படிப்பு எதுவும் கிடையாது
இந்த வயசிலேயே குலத்தொழில்."(தக.ப.6)

என்றும்,

"என்னலே பொஸ்தவத்தைக்கட்டிட்டு மாரடிக்க?
கடாசு அந்தக் கஸ்மாலத்த'' (தக.ப.30)

என்றும்,

"படிச்சவனுஞ் செரி படிக்காதவனுஞ்செரி
நம்மட்டத்தான் வரணும்லே. . .
நினைப்பு வச்சுக்கோ. . .'' (தக.ப.31)

என்பதன்வழி அவர்கள் கல்வியைப் பெரியதாகக் கருதவில்லை எனலாம். மேலும், 'வி.நே.' புதினத்தில்,

“படிச்சு ஒரு வேலைக்குப் போயி நாலு காசு சம்பாதிச்சப்புறம் கல்யாணம் பண்ணலாமேன்னு கேட்டா தப்பா? அரைகுறையாப் படிப்பை நிறுத்தணுமா? படிச்சவங்களே வேலை இல்லன்னு திண்டாடறாங்க. . .படிக்காத அடி முட்டாளா நின்னா எவன் வேலை தருவான்? மரியாதையா நடத்துவானா?. . .”

(வி.நே.ப.15)

என்பதன் மூலமாக, படித்து முடித்த பிறகு கல்யாணம் செய்து கொள்ளலாம். ‘காலத்தோடு பயிர் செய்’ என்பது போலப் படிக்க வேண்டிய காலத்தில் படிக்க வேண்டும். நம்நாட்டில் அதிகமாக படித்தவர்களுக்கே வேலையில்லாதபோது வாழ்க்கைக்குத் தேவையான குறைந்த பட்சக் கல்விகூட படிக்கவில்லை என்றால் யாரும் மதிக்க மாட்டார்கள் என்று ஜெயாவிற்கு, விஜயா அறிவுரை கூறுகிறாள்.

## பெண்கல்வி

இன்றைய மாணவர்களுக்கு நாளைய சமுதாயத்தை வழிநடத்திச் செல்லும் பொறுப்பு உள்ளது. கல்வியே ஒரு மாணவனை உயர்ந்த நிலையை அடையச் செய்கிறது. கல்வி கற்பது நல்லொழுக்கம் பெறுவதற்குத்தான். ஒழுக்கத்தைத் தராத கல்வி பயனற்ற கல்வியாகும். வள்ளுவர், ஒழுக்கம் உயிரைவிட ஓம்பப்படவேண்டிய ஒன்று என்று குறிப்பிடுகின்றார். இன்றைய சமுதாயத்தில் மாணவர்கள் கலை, மருத்துவம், பொருளியல், பொறியியல் கணினி என்று பல துறைகளில் தம் கல்வித் தரத்தை மேம்படுத்திக் கொள்கின்றனர். இருப்பினும் சில மாணவர்கள் கல்வியில் நாட்டம் இல்லாமல் மனம் போன போக்கில் ஒழுக்கமற்ற

செயல்களைச் செய்கின்றனர். மாணவர் சமுதாயத்தில் காணப்படும் இவ்விரு நிலைகள் ஆ.பி.யின் ‘விலை’ புதினத்தில் கூறப்பட்டுள்ளது.

கல்வி இன்றைய மாணவர்களிடத்தில் ஒரு பொழுதுபோக்காக மாறிவிட்டது. தேர்வில் தோல்வியடைந்து நிலுவைத்தாள் வைத்திருந்தால்தான் ஆண்மைக்குப் பெருமை என்று எண்ணும் அளவிற்கு மாணவர்களிடத்தில் கல்வித்தரம் குறைந்து போய்விட்டது என்பதை, ‘விலை’ புதினத்தில்,

“அரியர்ஸ் இல்லாதவன்லாம் ஸ்டூடண்ட்தானா? அதிக அரியர்ஸ்காரன்தான் சரியான ஆம்பளை. . .’’ ஹோவென்று கைகொட்டிச் சிரித்தது கான்டீன்கும்பல்.’’ (விலை.ப.38)

என்பதன் மூலம் அறிய முடிகின்றது.

‘கா.சொ.’ புதினத்தில் ராதாவின் கல்வி நிலையைப் பற்றிக் கவலைப்படும் அண்ணி சந்தியாவை ராதா எதிர்த்துப் பேசி தனக்கு ஏற்பட்ட காதல் நிலையைப் பற்றிக் கூறுகிறாள். இதனை,

“எப்பப்பார்த்தாலும் டிகிரி, வேலை, சோறுன்னு ஒரே நினைப்பு மன்னி உங்களுக்கு. . .காதலைப்பத்தி என்ன தெரியும் உங்களுக்கு காதலிச்ச அனுபவம் உண்டா உங்களுக்கு? காதல் சொர்க்கம் அனுபவிச்சவங்களுக்கு உங்க மாதிரி சாதாரண நினைப்பெல்லத் வரவே வராது. . .தெரியுமா. . .’’ (கா.சொ.ப.98)

என்னும் கூற்றின் மூலமாக இன்றைய பெண்களும் சரி, ஆண்களும் சரி காதலுக்குத்தான் முக்கியத்துவம் தருகின்றனரே தவிர கல்விக்கு முக்கியத்துவம் தருவது கிடையாது என்பதை ஆசிரியர் ‘கா.சொ’ புதினத்தின் வாயிலாக வெளிக்காட்டியுள்ளார்.

## பெண்கல்வியின் தேவை

பெண்கல்வியின் தேவையைப் படைப்பாளிகள் வலியுறுத்தியுள்ளனர்.

“கமலா - இந்த வரனைப்பாரு. பாங்ல க்ளார்க். நல்ல சம்பளம் சாருவுக்கு முடிச்சிடலாமா?”

“எ. . .என்னங்க இது? கோல்ட்மெடல் வாங்கி பாஸ் பண்ணியிருக்கா நம்ம பொண்ணு. அதுக்குள்ளாற மூணு முடிச்சுக்கு அவசரமா? மேல படிக்கட்டும். அவ படிப்பு ஆர்வத்துக்குத் தடை போடாதீங்க...”(சாரு.ப.12)

என ‘சாருலதா’வில் கமலா வாயிலாக பெண் கல்வியின் தேவையை ஆசிரியர் அறிவுறுத்துகிறார் எனலாம். ‘கா.சொ’ புதினத்தில்,

“உன்னை காலேஜ்ல படிக்க வைக்கறதுக்காக என் வளையலை வித்தேன். . .மூணு வருஷம் நல்லாப் படிப்பே. . .ஏதாச்சும் வேலை வாங்கிக் கொடுத்து நல்ல படியாய்க் கல்யணாம் முடிக்கலாமன்று நெனைச்சேன். . .ப்ச் வேஸ்ட். . .”

“எம்.ஏ., பிஎச்.டின்னு படிக்கறவங்களுக்கே சரியான வேலை கிடைக்க மாட்டேங்குது. . . நீ. பி.ஏ., முதவருஷம் முடிக்கறதுக்குள்ளயே ஆயிரமாயிரம் சபலம். . .சலனம். . .எப்படித்தான் வாழ்க்கைல உருப்படறது நீ? ம். . .?” (கா.சொ.ப.98)

என்ற வரிகளின் வாயிலாக ராதாவின் அண்ணி சந்தியா, ராதா படித்து நல்ல நிலைமைக்கு வரவேண்டும் என ஆதங்கப்பட்டு ராதாவுக்கு கல்வியின் தேவையை எடுத்துரைக்கிறாள்.

## பெண்கல்விக்குத் தடை

பெண் கல்வி கற்றால் ஆணைவிட அறிவிலும் செயலிலும் உயர்ந்து விடுவாள் எனக் கருதி பெண்ணுக்குக் கல்வி அறிவு தடை செய்யப்படுகிறது. இதனை ஆசிரியர் பல்வேறு புதினங்களில் கூறியிருக்கிறார்.

"பொட்டச்சிக்கு எதுக்குப் படிப்பு? என்ன இருந்தாலும் இன்னொருத்தன் வீட்டு அடுப்படிக்கு போறவதானே?" (கதா. ப.20)

என்று 'கதா' புதினத்திலும்,

"மேலே படிக்கலாம். கமலா அப்புறம் சாருவைவிட அதிகம் படிச்ச மாப்பிள்ளை தேடணும். கலியாணச் செலவு அதிகமாகும். சர்வீஸ்ல இருக்கறப்பவே ஒருத்தியாச்சும் கரையேத்திடலாமே. . ." (சாரு.ப.12)

என்று சாருவின் தந்தை மேலும் அவள் கல்வி கற்பதற்குத் தடை செய்வதும், அதனை கமலாவும், சாருவும் மறுப்பதுமாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

"ஸ்கூல் போல்லே நீங்க. . .?

ம்ஹூம். . . . "

இன்னிக்கு என்ன லீவ்?

"ஏம்மா. . .? ஸ்கூலில் ஏதாச்சும். . . .

"ம்ஹூம். . .தேர்ட்டேர்ம் பீஸ் கட்டணுமாம். மூணு பேருக்கும் சேர்த்து ஆயிரத்து ஐநூறு, ரெண்டாயிரம் வருது. கட்டுப்படியாக மாட்டேங்குது. அதான் ஒரேயடியா நிறுத்திட்டேன். படிச்சுக் கிழிச்சால் மட்டும் அள்ளிடவா போறாங்க பணத்தை? பிச்சைக்காசு ஐநூறுக்கும், ஆயிரத்துக்கும் கை கட்டிச் சேவகம் பண்ணணும். அதைவிட இதுவே பரவால்ல. . .இந்தக் காசை மிச்சம் புடிச்சால் கல்யாணத்துக்காவது உதவும். . . " (சாரு.ப.29)

என்று சாருவின் தங்கைகள் மூவரின் கல்விக்கு சாருவின் தாய் கமலா தடையாக இருக்கிறாள். காரணம் வறுமையைக் காட்டுகிறாள். மேலும், ‘வி.நே’ புதினத்தில்,

“பத்தாவது முடிச்சுடணுமா? ஒண்ணும் வேணாம். அப்புறம் - படிக்கப் போறேன். பேர்வழின்னு ஊர் மேயப் போவ. . .புத்தி புஸ்தகத்துல போகாம, ஆம்பளைப் புள்ளைங்க மேல போவும். தறுதலையாப் போவ. . .ஏன் பொல்லாப்பு? கல்யாணம் முடிச்சுடலாங்க. . .” என்று சொன்ன அம்மா,

‘மேல மேல படிக்க வச்சா – எனக்குத்தான் செலவு ஜாஸ்தியாவும் படிக்க வைக்கற செலவு. உன்னைவிட அதிகம் படிச்ச மாப்பிள்ளையத் தேடற செலவு, அவன் போடற கண்டிஷன், அவன் கேக்கற வரதட்சணை எல்லாம் ஒத்துக்கிட்டு உன்னைக் கரையேத்தறதுக்குள்ள தாவு தீர்ந்துடும்.” (வி.நே. ப.11)

என்று விஜயாவின் தந்தை கூற்று வழிப் பெண்கல்வி தடைபடுவதை ஆ.பி. சுட்டுகிறார். ‘தகனம்’ புதினத்தில்,

“இனிமே நீ இஸ்கூலுக்குப் போவேணாம் ராணி. பொட்டப்புள்ள வூட்டோட இருந்து ஆக்கி எறக்கப்பாரு. . .நாளைக்கே கட்டினவன் ஊட்டுக்குப் போயி சோறாக்கப் பேய்முளி முளிச்சேன்னு வையி. . .சம்பந்தக்காரி என்னைத்தான் சாடை பேசுவா. . .” (தகனம். ப.53)

என்று ராணியின் தாய் முனியம்மா கூற்று வாயிலாகவும் பெண் கல்விக்கு தடை ஏற்படுவதை அறிய முடிகிறது.

## அரசியல் நிலை

சமுதாயத்தோடு நெருங்கிய உறவுடையது அரசியலாகும். இதனை இலக்கியப் படைப்பாளர்கள் பலரும் போற்றவும், தூற்றவும்

செய்கின்றனர். இத்தகைய அரசியல் சாதியையும், மதத்தையும் பற்றி பேசத் தூண்டிக் கொண்டே இருக்கின்றது. இதனை,

"சமுதாயத்தில் வாழ்கின்ற மனிதன் தன் உள்வெளி விவகாரங்களை உருவாக்குவதும், இயக்குவதும் ஆள்வதும் ஆகிய அறிவியல் கலையே அரசியல் ஆகும்" [27] என்கிறார் சாலை. இளந்திரையன். பணமோகம், பதவி மோகம் கொண்டு தன்னலத்திற்காகப் பிறரை அழிக்கும் அரசியல்வாதிகளைச் சமுதாயத்தில் காணமுடிகின்றது.

'தகனம்' புதினத்தில் கவுன்சிலரை ஊழல் செய்பவராகவும், மக்களிடம் போலியாக வாழ்பவராகவும் ஆசிரியர் படைத்துள்ளார்.

ஊழல் இன்று எல்லாத் துறைகளிலும் மலிந்து விட்டது. அரசு அதிகாரிகள் சிலர் கையூட்டுப் பெற்று இன்று வளமாக வாழ்ந்து வருகின்றனர். அரசியலில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையோர் ஊழல் செய்கின்றனர். ஊழலால் நாடு முன்னேறாமலும், ஏழைகள் ஏழைகளாகவும், பணக்காரர்கள் பணக்காரர்களாகவும் இருந்து வருகின்றனர்.

'தகனம்' புதினத்தில் வெள்ள நிவாரண நிதியை முழுவதுமாக மக்களுக்குக் கொடுக்காமல் 'கவுன்சிலர்' ஊழல் செய்வதை,

"அந்த வகையில் நமக்குச் சுளையாப் பத்து லட்சம் லாபம்யா"

(தக.ப.68)

எனச் சுட்டியிருப்பது ஊழலைக் காட்டுவதாம்.

இன்றைய சமுதாயத்தில் அரசியல்வாதிகள் மக்களிடம் நல்லவர்கள் போன்று நடிக்கின்றனர் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். சின்ராசு கவுன்சிலரிடம், "எதிர்க்கட்சிக்காரர்கள் இரண்டாவது முறையாக

குப்பத்து மக்களைப் பார்த்துப் பணம் கொடுத்தனர்” என்று கூறியவுடன், கவுன்சிலர்,

“ஓ. . .ரூட்டு அப்படிப் போவுதா. . .? ஏம்ப்பா. . .இதைக் கோட்டை விட்டீங்களோ? கவுத்துட்டாங்கன்னா. . . அப்புறம் எவங்காலை நக்குவீங்க? ம்? குழி பறிச்சுடாதீங்கலே. . .” (தக.ப.69)

என்றும்,

“நானும் ஒரு காலத்துல தாமரைக்குப்பத்து ஆளு தான். . இப்பரெண்டு ஏஸின்னு பளகினாவுட்டு, அந்த நாத்தம் குமட்டுது. . .அந்த ஜனங்க குமட்டுறாங்க... இனிம பழைய குடிசை வாள்க்கையை நினைச்சாலும் வாள முடியாது. . . .”

(தக.ப.129)

என்றும் கூறுவதன் வழி அரசியல்வாதிகளின் போலி வாழ்க்கை வெளிச்சத்துக்கு வருகிறது.

## சுரண்டல்வாதிகள்

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்காக அரசு பல நலத்திட்டங்களை ஒதுக்கியிருந்தும் அவை இவர்களை வந்து அடைய முடியாதவாறு சுரண்டும் பிணம் தின்னிக் கழுகினைப் போன்ற அரசியல் வாதியையும் ஆ.பி. அடையாளம் காட்டியுள்ளார்.

தாழாங்குப்பத்தில் பெய்த மழையினால் மக்கள் வாழ்ந்து வந்த குடிசைகள் அனைத்தும் சேதமாயின. அதற்காக அரசு நிவாரண உதவிகளை அறிவிக்கின்றது. தாழாங்குப்பத்திற்குச் சாலை வசதி செய்து தர அரசு நிதி ஒதுக்குகிறது. பினாமி பெயரில் அந்தப் பணியை எடுத்து, தரமற்ற முறையில் சாலைப் பணியினை முடித்து அதிலும் சுரண்டி விடுகின்றான். இவ்வாறு

நிவாரண உதவிகளையும், சாலை மேம்பாட்டிற்காக வந்த நிதியையும் சுரண்டியதோடு நில்லாமல் பிணம் எரிப்பவர்களின் வயிற்றில் அடிக்க முடிவு செய்கின்றான் கவுன்சிலர்.

இது பற்றிக் கவுன்சிலர் தன் செயலரிடம் “இந்த மனு குடுத்த வெட்டியானுங்களை ஒளிச்சுக்கட்டணும், அதுக்குத்தான் மெஷினால எரிக்கிற திட்டம் அறிமுகப்படுத்துகிறோம். நாமதான் டெண்டர் எடுத்திருக்கோம். பத்து வெட்டியானுங்க இருக்கிற இடத்துல இரண்டு மூணு பேரு, இருந்தாப் போறுமில்ல?”

(தகனம்.பக்.129-130)

என்ற கவுன்சிலரின் இந்தத் திட்டம் பிணம் எரிப்பவர்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கும் நிலை. வேலை இல்லாத் திண்டாட்டம் இன்னும் அவர்களைச் சமூகத்தில் பின்னோக்கித் தள்ளிவிடும். இவர்கள் வாழ்க்கை வளம் பெற அரசு மட்டும் அல்ல அரசியல்வாதிகளும் இந்தச் சமூகமும் மனம் வைக்க வேண்டும்.

‘உ.ஆ.’ புதினம், அரசியல் கட்டமைப்பு, உத்திமுறைகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

“அரசியல் என்றால் சும்மாவா? இருபத்தி நாலு மணி நேரமும் கண்கொத்திப் பாம்பாய் இருந்தால் தான் ஜெயிக்க முடியும். இல்லையென்றால் காலடியிலேயே குழி தோண்டுபவர்களைக்கூடக் கண்டுபிடிக்க முடியாமல் போய் விடுமே. குப்புறக் கவிழ்த்து விடுவார்களே. முதுகில் குத்தி விடுவார்களே. எல்லாம் செய்துவிட்டுச் சின்னச் சிரிப்போடு, கைகுலுக்கி நிற்பார்களே. . .கத்திக்கும், பூங்கொத்துக்கும் வித்தியாசமே தெரியவிடாமல் பூச்சுற்றுவார்களே.” (உ.ஆ. ப.156)

“தாயி – அரசியலே – எதிரிங்களோட கண்ணாமூச்சி விளையாடறதுதான். எப்ப எவன் கையிலே அகப்படுவோம்னு தெரியாது. எவன் குழி பறிக்கான்னு தெரியாது, மாப்பிள்ளைக்குக் கட்சியிலே மரியாதை கூடுது. செல்வாக்குக் கூடுது. தலைவரோட நெருக்கம் கூடுதுன்னு தெரியுது. இதிலேயே நிறைய பேருக்கு வயித்தெரிச்சலா இருக்கும் எப்படா வாய்ப்பு வரும், குழி பறிக்கலாம்னு காத்திட்டிருப்பானுவ. அதனால ஜாக்கிரதையா இருக்கச் சொல்லு. எப்பவுமே துணையா ரெண்டு பேரோட போகவரச் சொல்லு. தனியாப் போக வேணாம். ராத்திரி – ரொம்ப நேரங்கழிச்சு வீடுவரச் சொல்லாதே . . . அண்ணாச்சியவிட உசரத்துக்குப் போகணும் மாப்பிள்ளை . . . அவுக அடைகிற வெற்றியைவிட, அதிக வெற்றி மாப்பிள்ளைக்குக் கிடைக்கணும் . . .” (உ.ஆ., ப.167) இவ்வாறு அரசியலில் உள்ள சூட்சுமத்தை பூரணியின் சித்தப்பா, பூரணியிடம் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

## அரசியலில் நேர்மை

அரசியல் என்றாலே சுயநலம் மிகுந்து காணப்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசியலில் நேர்மையானவர்களும் இருப்பதாக ஆசிரியர் தன்னுடைய ‘உயிரெழுத்து, ஆயுத எழுத்து’ புதினத்தில் செந்தில்நாதன் பாத்திரத்தைப் படைத்துக் காட்டியுள்ளார்.

“இன்னிலோர்ந்து சென்னை மாவட்டச் செயலாளரா செந்தில்நாதனை நியமிக்கிறேன். துடிப்பான இந்த இளைஞருக்கெல்லாம் நேர்மையான மனிதருக்கெல்லாம், உயர்வு அளிக்கப்பட்டால்தான் அரசியல் தூய்மையாகும். நல்லவர்களும் அரசியல்ல சேர்ந்து சேவை பண்ண வருவாங்க. செந்திலோட நேர்மைக்கு எடுத்துக்காட்டு அவர் குடியிருக்கற

கையகல வீடும். அவரோட மனைவி இன்னமும் டீச்சரா வேலை பார்த்துச் சம்பாதிக்கறதும்தான் மாநாட்டுச் செலவுக்காக அவர் கையில கொடுத்த ஒரு லட்ச ரூபாய்க்குப் பைசாக் கணக்கோட சரியா வச்சிருக்கார். எந்த விதமான சபலத்துக்கும் ஆளாகாத மனிதர். இவரைப் பார்த்து எல்லாருமே நேர்மையைக் கத்துக்கணும்.'' (உ.ஆ., பக்.169-170) என்ற கூற்றின் மூலமாக அரசியலில் செந்தில்நாதனைப் போல் நேர்மையானவர்கள் இடம்பெற வேண்டும் என்பது ஆசிரியரின் விருப்பமாக வெளிப்படுகிறது.

## அரசியல் சூழ்ச்சி

அரசியல் என்றாலே சூழ்ச்சிகளும், தந்திரங்களும், ஏமாற்றங்களும், வெற்று வாக்குறுதிகளும், போலி முகங்களுமே நிறைந்து காணப்படும். அதனை ஆசிரியர் அப்படியே தன்னுடைய புதினத்தில் பதிவுசெய்துள்ளார். இதனை, "ஏதாச்சும் டொனேஷன்கூடக் குடுத்துடலாம், ஐயா. சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனாப் புடிக்கலாம். அம்பதாயிரம் ரூபா டொனேஷன் குடுத்துட்டு அந்த ஏரியில இருக்கிற ஒரு லட்சம் ஓட்டு நம்ம பக்கம் விழற மாதிரி பண்ணிடலாம். (உ.ஆ., ப.180) என்ற மாரியின் கூற்றுவாயிலாக அரசியல்வாதிகளின் சூழ்ச்சியை மக்களுக்கு ஆ.பி., படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

## காதல்நிலை

ஆண், பெண் இருவரும் தம்முள் அன்பு கொண்டு வாழ்வது காதல் ஆகும். இவர்கள் ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் அன்பே காதலாக மாறுகிறது எனலாம். காதலினால் குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அச்சிக்கல்களை ஆணும் பெண்ணும் எதிர்கொள்கின்றனர். பெரும்பாலும் ஆணைவிடப் பெண்ணே பாதிக்கப்படுகிறாள் எனலாம். காதல்

வயப்பட்ட பெண்களின் சிக்கல்கள் பொருளாதாரம், குழந்தைப் பேறின்மை என்ற இருநிலைகளில் சிக்கல்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதை ஆசிரியர் “ ‘க.கை.பி’ புதினம் மூலம் உணர்த்தியுள்ளார்.

‘க.கை.பி’ கதையில் உடலளவில்மட்டும் பெண்ணாக இருக்கும் தீபாவும், உண்மையிலேயே ஆணாக இருக்கும் ரவிசங்கரும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றார்கள். தீபா, ரவிஷங்கரைத் திருமணம் செய்துகொள்ள மறுக்கிறாள். காரணம், குழந்தைப் பேரின்மையே என்பதை, “ம். . . உடலளவில் பெண். ஆனா கர்ப்பப்பை மட்டும் கிடையாது. தாயாக முடியாது. . . ” (க.கை.பி., ப.135) என்ற தீபாவின் கூற்று வழி ஆசிரியர் உணர்த்தியுள்ளதை அறியமுடிகிறது.

## காதல் வலிமை

ஆ.பி.,யின் படைப்புகளில் காதலின் வலிமையை ‘சு.பி.வீ’ புதினத்தில், ஸ்ருதி என்பவள் ரகு என்ற தன் அத்தை மகனை ஈடுபாட்டுடன் விரும்புகிறாள். சந்தர்ப்ப சூழ்நிலையில் ரகு அமெரிக்கப் பெண்ணான ஐரீனை மணக்க நேரிடுகிறது. அதனால் ஸ்ருதி திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே இருந்து வருகிறாள். ரகு அவளை வேறுதிருமணம் செய்து கொள்ளும்படிக் கேட்கும் போது, “விவரம் தெரிஞ்ச நாளன்னிக்கே என் மனசளவிலே உங்களுக்கும் எனக்கும் கல்யாணமாயிருச்சு. தினமும் மனசாலே என் ரகுவுக்கு மனைவியாய்த்தான் வாழ்ந்து கொண்டிருக்கேன்.”(சு.பி.வீ., பக்.29-30) என்று கூறுகிறாள். ஸ்ருதியின் காதல் மனத்தைக் கண்டு ரகுவே ஓரிடத்தில் வியந்து பாராட்டுவதை, “வெளிப்பார்வைக்குத்தான் அவள் பூ மாதிரி மென்மை. அவன் மீது வைத்திருக்கும் அந்தக் காதலில் பாசத்தில், அன்பில் வைரம் மாதிரி

தூய்மை, கடினம், ஸ்திரத்தன்மை, எல்லாவற்றின் கூட்டு'' (சு.பி.வீ., ப.21) என்கிற வரிகளின் வழி காணலாம். ஸ்ருதியின் காதல் வலிமையை ஆ.பி., தெளிவாக விளக்கியுள்ளார்.

காதலின் வலிமையை, சின்னராசு சின்னப் பொண்ணுவைப் பிரிந்து வசதியான உறுப்பினர் மகளைத் திருமணம் செய்ய நினைக்கும் போது இவனையே வாழ்க்கையில் நினைத்துக் கனவு கண்டுகொண்டிருந்த சின்னப்பொண்ணு மட்டும் எவ்வாறு வேறு திருமணம் செய்து கொள்வாள். பிணம் எரித்துக் கொண்டிருக்கும்போது இதையெல்லாம் நினைத்துப் பிணத்தோட பிணமாய் சாவாளே தவிர இவள் மனதார வேறு திருமணம் செய்ய மாட்டாள் என்பதன் வழி 'தகனம்' புதினம் தெளிவாக்குகின்றது. ஆசிரியர் எழுதும் புதினங்களிலும் சரி, சிறுகதைகளிலும் சரி, காதலின் வலிமை உள்மனத்தால் உணர்த்தப் பெற்றுள்ளது.

"காதலுக்குக் கண்ணில்லை'' என்றும்,

"கண்டதே காதல்''

என்றும் கூறப்படுவதைப் போன்று ஆண்டாள் பிரியதர்ஷினி 'தகனம்' புதினத்தில் சின்னராசுவின் காதலி சின்னப்பொண்ணு என்னும் பாத்திரத்தின் வழி கூறுகின்றார். சின்னராசு குடும்பத்தில் மூத்த மகன் சின்னப்பொண்ணு அவள் குடும்பத்தில் மூத்தவள். இருவரும் அத்தை, மாமா குடும்பத்து முறைப்பிள்ளைகள். இரு குடும்பத்துத் தொழிலும் பிணம் எரிக்கும் தொழிலான வெட்டியான்தொழில். இத்தொழிலை ஆண், பெண் கூட்டாகச் சேர்ந்து செய்து வந்தார்கள்.

இதற்கிடையில் சின்னப்பொண்ணுவிற்கு மாமன் மகன் சின்னராசுவின் மேல் காதல். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த

இவர்களுக்குக் காதல் வளர்ந்து கொண்டே வந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ளும் ஆசையில் கனவோடு இருக்கின்றனர். சின்னப்பொண்ணு தன் காதலனைப் பார்த்து,

"என்னவோ சின்ராசு பொம்பள செம்மம். புருஷங்காரன்னு உன்ன மனசுல வச்சுட்டன். நீ சொல்றதுதேன் வேதவாக்கா இருக்கு. இந்த செம்மத்துல ஒன்னோட சேருவேனா பாக்கேன்" (தகனம். ப.710

என்று தன் காதலனை கணவனாக மனத்தில் வைத்திருப்பதாகச் சின்னப்பொண்ணு கூறுகின்றாள்.

## காதல் ஏக்கம்

'க.கை.பி' புதினத்தில் ரவி சங்கர் தீபா மீது உள்ள காதல் ஏக்கத்தை

"இப்படிக் காரணகாரியமும், ரிஷி மூலம் - நதி மூலம் பார்த்துக் கணக்குப் பார்த்துக் காதல் வருவதில்லையே. . .எனக்கு தீபாதான் வேண்டும். வேறு யாரையும் தீபா விரும்பவுமில்லை."(க.கை.பி. ப.111)

எனும் வரிகள் வழி அறியமுடிகிறது.

"கதாநாயகி" புதினத்தில்,

"பக்கத்தில் வருவார். . .கண்ணீரைத் துடைப்பார். . .கண்ணீர் வேண்டாம் கண்மணி. . .நான் உனக்குத் துணை, நீ எனக்குத் துணை. . ." என்று தோளில் சாய்த்து, தலை கோதி, மென்மையாய் உச்சியில் முத்தமிட்டு நேசத்தை ஊதுபத்திப் புகையாய் வெளிப்படுத்துவார் என்றெல்லாம் எதிர்பார்த்து ஏங்கிய நீலாயதாட்சிக்கு வருத்தம் பிடுங்கித் தின்றது. வேதனை நெஞ்சை அரித்தது. கோபமும், ஏமாற்றமும் முகத்தில்

அறைந்தது. இப்படியும்கூட ஒரு மனுஷர் எந்தவிதமான சலனமும் இல்லாமல் பாறையாய் இருக்க முடியுமா?" (கதா.ப.42)

என்ற வரிகள் நீலாயதாட்சிக்கு ஆதி மேல் உள்ள காதல் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறது.

## காதல் மோகம்

திரைப்படத்தைப் பார்த்து காதலர்கள் மோகம் கொண்டு தன்னுடைய பெயரையே மாற்றிக் கொள்ளும் அளவிற்கு 'விலை' புதினத்தில் வரும் இருளப்பன், சரளா கதைமாந்தர்களின் காதல் மோகம் வெளிப்படுவதை,

"இருளப்பன் குலதெய்வம் பேராச்சே. . .?" கிண்டலடித்தாள் அவள்.

"விடு சரளா. . .என் குலதெய்வம் நீ தான் கண்ணு. . . உன் காலடிதான் கோயில். இன்னிக்குப் புதுசாப் பொறந்து – பேரு வச்சுக்கறேன். சொல்லு சரளா – எது புடிச்சிருக்கு?"

இந்தக் காதல் என்ற உணர்வு வந்ததும் எத்தனை அழகாய்ப் பேச வருகிறது. . .சந்தோஷமாய்க் கெஞ்சினான் இருளப்பன். ஒரு நிமிஷம் அவனின் பேச்சில் சொக்கித்தான் போனாள் சரளா.

"அப்பசரி. . .அஜித்னுவச்சுக்கோ. . .எனக்கு அவரைத்தான் ரொம்பப் பிடிக்கும். . .மைஃபேவரிட் ஹீரோ . . ." (விலை.ப.44)

என்னும் வரிகள் காதல் மோகத்தைக் காட்டுகின்றன.

'கா.சொ'. புதினத்தில்,

"எப்பப் பார்த்தாலும் டிகிரி, வேலை, சோறுன்னு ஒரே நினைப்பு மன்னி உங்களுக்கு. . . காதலைப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு?

காதலிச்ச அனுபவம் உண்டா உங்களுக்கு? காதல் சொர்க்கம் அனுபவிச்சவங்களுக்கு உங்க மாதிரி சாதாரண நினைப்பெல்லாம் வரவே வராது. . .தெரியுமா. . .'' (கா.சொ. ப.98)

என்று ராதா தன்னுடைய உறவான அண்ணன் மனைவியிடம், தான் மனோகர் மீது கொண்ட காதல் வயப்பட்ட உணர்வைக் கொட்டுகிறாள்.

சமுதாய இயக்கத்தில் பசியுணர்வும், பக்தியுணர்வும் எவ்வளவுக்குப் பரவலான பாதிப்புகளை ஏற்படுத்தியதோ, அதே அளவில் பாலுணர்வும் பாதிப்பைத் தந்துள்ளது. 'தகனம்' புதினத்தில் காதல் தனிப்பெரும் சுவையாய் அமையப் பெறாமல் பாலில் கலந்த நெய்யாக உள்ளடங்கியுள்ளது.

சங்க காலத்தில் காதலும் வீரமும் மக்கள் வாழ்க்கையின் இரு கண்களாகப் போற்றி மதிக்கப்பட்டன. அந்த வகையில் காதல், உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டது. காதல் என்பது மக்களின் அகவாழ்வை ஒருங்கிணைப்பதாக அமைகின்றது. அன்றிலிருந்து, இன்று வரை தோன்றிய பல இலக்கியங்களின் பாடுபொருட்களே காதலாகத்தான் காணப்படுகின்றன. அடிப்படையாய் வாழ்வோடு ஒட்டி உறவாடும் உணர்ச்சி காதல் ஆகும். காதல் மனித வாழ்க்கையை இயக்கும் சக்தியாகக் கொள்ளலாம். ஆ.பி. 'தகனம்' புதினத்தில் நிறைவேறாக் காதலைப் பதிவு செய்துள்ளார்.

### நிறைவேறாக்காதல்

ஒரே இனத்து ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் காதலிப்பதும், அக்காதலும்கூட சில சமயங்களில் நிறைவேறாமல் போவதும் உண்டு. பொருளதார ஏற்றத்தாழ்வு, காதலர் ஒருவரையொருவர் புரிந்து

கொள்ளாமை, காதலர்களின் மனவுறுதியின்மை ஆகியவை இதற்குக் காரணங்களாக அமைகின்றன.

சின்ராசுவும், சின்னப்பொண்ணுவும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். சின்ராசு, கவுன்சிலருடன் நெருக்கமாகி வாழ்வில் எப்படியாவது முன்னேற வேண்டும் என்று நினைக்கிறான். இவனது பலவீனத்தை உணர்ந்த கவுன்சிலர், பதவி, பொருளாசை காட்டி இவனைத் தன்பக்கமாகத் திசை திருப்புகிறார்.

“நீ பீடி குடுக்காத சின்ராசு. அரசியல்ல இறங்கினா வூட்டு உறவெல்லாம் மறந்துடணும். அத்தப் பொண்ணு, மாமா பொண்ணு உறவெல்லாம் மறந்துடணும் கல்யாணம்கூடக் கணக்குப் போட்டுத்தான் பண்ணோணும். எதைக் கட்டிக்கிட்டா லாபமாயிருக்கும்னு நாலும் யோசிச்சுப் பார்த்துத்தான் தாலியக் கைல எடுக்கோணும். . .புரியுதா?” (தக.ப.128)

எனும் வரிகள் வழி சின்னப் பொண்ணு, சின்ராசுவிற்கு இடையிலான காதல் பொருளாதாரச் சிக்கலால் நிறைவேறாமல் போவதை உணர முடிகிறது.

காதலுக்குத் தடையாக ஏழ்மை, ஏமாற்றம், குறை, மற்றொருத்தியின் குறுக்கீடு எனத் தோன்றுகின்ற அவ்வளவிலும் வெற்றி பெற்றுக் கைப்பிடிக்கும் வாழ்க்கையிலும்கூடச் சோதனைகள் உள்ளன. ஆயினும், பிரிவு ஏற்படுதலும் இயல்பு. இவற்றை ஏற்றுக்கொள்கின்ற பக்குவமும் சபிக்கின்ற வெறுப்பையும் காண முடிகின்றது.

‘தகனம்’ புதினம் தன்னை விட்டுப்பிரிந்த சின்னராசுவை மனதளவில் சபிக்கின்றாள் சின்னப் பொண்ணு.

“என்னைக் கெடுத்தவனை

எனக்குமதி சொன்னவனை

சொகுசைக் குலைத்தவனை

சுத்தாதா என் பாவம்”[28].

இப்படி எல்லாப் பெண்களுக்கும் சினம் வரத்தான்செய்யும். பிரிவுக்கு அவன் மட்டுமே காரணமாக இருக்க வேண்டியதில்லை. வேறொருத்தியின் தொடர்பும்கூடப் பிரிவை ஏற்படுத்தும்.

“சேர்ந்து இருந்தோமையா

சேலத்துக் கொண்டையிலே

நாரை வந்து மீனைத் தொட

நைந்த தையா நம்முறவு”[29].

என தன்னை விட்டுப் பிரிந்த சின்ராசுவை நினைத்து சின்னப் பொண்ணு சாபத்தையும், உறவு முறிவையும் பற்றிக் கூறுகின்றாள்.

‘விலை’ புதினத்தில், இருளப்பனுக்கு ஏற்பட்ட காதல், பொருளாதாரத்தை எதிர்பார்த்து அமைவதாக உள்ளது. காதலியின் மேல் உள்ள நம்பிக்கையில் பெற்றோருக்கு மதிப்பளிக்க மறந்து போகிறான் இருளப்பன். பின்புதான், தெரிகிறது பொருளாதார வசதி இல்லாத இருளப்பனின் காதலைக் காதலி சரளாவும் மதிக்கவில்லை என்பது, பலர் தம் முன்னோர் தேடி வைத்த சொத்துக்களை விற்றுப் படிக்க வைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் பிள்ளைகள் பள்ளியில் தங்கள் கடமை என்ன என்று அறியாமல் காலித்தனத்தையும், போக்கிரித்தனத்தையும், பெற்றோர்களை வஞ்சிப்பதையும், ஏமாற்றுவதையும் தேசாபிமானம் என்று கருதிக்கொண்டு அதில் விழுந்து நாசமடைகின்றார்கள்.

உயிருக்குயிராய்க் காதலித்த சரளா இருளப்பன் காதலில் திடீர் விரிசல். காதல் மோகத்தினால் இருளப்பன், பெற்றோர்களுக்குக்

கீழ்ப்படியவில்லை. கல்வியிலும் ஈடுபாடு இல்லாமல் கீழ்த்தரமான நிலைக்குச் சென்றதைக் கண்டு நண்பர்களும், காதலியும் மதிக்காமல் விலகிச் சென்றார்கள். இருளப்பன் வாழ்க்கையை பெருத்த ஏமாற்றமாக உணர்ந்ததை ஆசிரியர்,

"நீ என்னிக்குத் தலையெடுத்து சம்பாரிச்சு என்னைக் கல்யாணம் கட்டிக் காப்பாத்தப் போறே? படிப்பு கொஞ்சம்கூட மண்டைல ஏறாத வடிகட்டின முட்டாளா என் குழந்தைகளுக்கு அப்பாவா இருப்பான்? த்தூ. . . கேவலம்.. .என்ன திறமை இருக்கு உன் கிட்ட?

காதலிக்கணும்னு ஆசைப்படறது தப்பில்ல. . .அதுக்குண்டான தகுதிய வளர்த்துக்கோ. . .புரியுதா. . .உன்னோட நானும் பிச்சையெடுக்கத் தயாரா இல்ல..." (விலை., ப.58) எனும் வரிகள் காதலர்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்பிக்கிறது எனலாம். 'கானல் சொர்க்கம்' புதினத்தில்,

"இத்தனை சொத்துக்களும் என் கைக்கு வர வேண்டும். . . அதற்கு ஒரே வழி சரளாவை கல்யாணம் செய்வது தான். அப்போது – ராதா? ம் ராதாவும் தான் தேவை. . . ஆனால், வாழ்நாள் முழுசும் அல்ல. . .அவளின் அழகும் வனப்பும் - ஒரு முறை அனுபவித்தால்கூடப் போதும். . ." (கா.சொ. ப.93)

"திருமணம் என்கிற புனிதமான பந்தத்திற்கு அப்புறம் நடக்க வேண்டிய தெய்வீகச் சடங்குகள் எல்லாம் காதல் என்ற பெயரில் கேலிக் கூத்தாக்கப் பட்டதை உணரவேயில்லை ராதா. . .

'இது தான் காதல்' என்கிற தவறான கொள்கைக்கும் உடல் ஈர்ப்புதான் காதல் என்கிற தவறான கோட்பாட்டிற்கும் இளைஞர்கள் வந்து விட்டார்கள். அவர்களின் முன்மாதிரி ராதாவும், மனோகரும். . ." (கா.சொ. பக்.101-102) என்பதன் வாயிலாக,

மனோகர் ராதாவை உயிருக்கு உயிராய்க் காதலித்துவிட்டுப்பின்பு அத்தைமகள் சரளாவைத் திருமணம் செய்து கொண்டு, ராதாவை ஏமாற்றி விடுகிறான் என இரு உள்ளங்களும் அன்பை வெளிப்படுத்தும் விதத்தில் ஒருவரையொருவர் ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்படுவதை ஆசிரியர் தெளிவாக விளக்குகிறார்.

## மாணவர்களின் நிலை

காதலிப்பவர் அனைவரும் திருமணம் என்ற இறுதி நிலையை அடைவதில்லை. சில காதலர்கள் குடும்பச் சூழ்நிலையால் பிரிகின்றனர். சிலர் தமக்குள் ஏற்படும் கருத்து வேறுபாட்டின் காரணமாகப் பிரியும் சூழல் ஏற்படுகிறது. சிலர் பொருளாதாரத்தின் அடிப்படையில் காதலை வெறுக்கின்றனர்.

'விலை' புதினத்தில்,

காதலிக்கும் காலத்தில் சரளாவுக்குக் கதாநாயகன் அஜித்தாகத் தெரிந்த இருளப்பன், பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் பண்ணையார் பிள்ளை கிடைத்தவுடன் பிச்சைக்காரனாகத் தெரிகிறான். ஏமாற்றும் நிலை இருபாலரிடத்திலும் இருந்தாலும், மாணவிகள், மாணவனை ஏமாற்றும் நிலையை,

"நம்ம கல்யாணம் நடக்கும். எனக்கு வேற மாப்பிள்ளையோட. . உனக்கு வேற பெண்ணோட. . .நம்ம ரெண்டு பேருக்கும் ஒண்ணாகக் கல்யாணம் நடக்காது. கிராமத்துப் பண்ணையாரோட எனக்கு நிச்சயமாச்சு. நூறு ஏக்கர் வச்சிக்காரு, காரு. . .கோட்டை மாதிரி வீடு, ஆடு, மாடு, தோட்டம், துரவு, ஆள்படைன்னு சகல சௌபாக்கியம்" (விலை. பக்.58-59)

என்பதன் வழி மாணவிகள் பொருளாதாரத்தில் உயர்ந்த வாழ்க்கை கிடைத்துவிட்டால் காதலித்தவனைக் கைவிடும் நிலையை இவ்வரிகள் காட்டுகிறது.

## குடிப்பழக்கம்

மது அருந்துவது உடல் நலத்தைப் பாதிப்பது ஆகும். முதலில் பாதிப்புக்கு உள்ளாவது நரம்பு மண்டலம் ஆகும். மாணவர்கள் குடிப்பழக்கத்தில் ஈடுபடுகின்றனர். குடிபோதையில் தன் நிலை மறந்து, தான் செய்யும் செயல் மறந்து - இழிவான செயல்களில் நாட்டம் கொள்கின்றனர். 'விலை' புதினத்தில் இருளப்பனும், அவனது நண்பர்களும் சேர்ந்து குடித்து விட்டு போதை மயக்கத்தில் ஆரவாரம் செய்கின்றனர். சகோதரத்துவத்தை மறந்து, பெண்களைக் கேலி செய்து வம்பளக்கும் செயலிலும் ஈடுபடுகின்றனர். இதனை ஆசிரியர்

"பக்கத்து டவுனுக்குப் போகலாம் இருளா. . . சினிமாக்குப் போயி உக்கார்ந்தா கவலையெல்லாம் மறந்துடும். . ." என்கிறார்கள்.

"அதுக்குச் சினிமாவுக்கு ஏன்? கைக்காசு போட்டு டவுனுக்குப் போகணுமா? இந்தா - இத ஒருவாய் ஊத்து. . . கவலையாச்சு மண்ணாச்சு. . ."

மீண்டும் அமாவாசை நீட்டினான். கோபமும் சோகமும் துக்கமும் வேதனையும் பொங்கிப் பொசுக்கியதில் - என்ன செய்கிறோம் என்கிற சிந்தனையே இல்லாமல் சாராயபாட்டிலை வாங்கிக் கடகடவென்று முழுங்கினான் இருளப்பன்." (விலை.ப.32)

என உணர்த்துகின்ற பாங்கு இங்குச் சுட்டத்தக்கது.

‘சூரசம்ஹாரம்’ புதினத்தில்,

பார்வதியம்மாவின் மூத்தமகன் அழகேசன் சிறுவயதிலேயே தவறான செயல்களில் ஈடுபடுகின்றான். இதனை,

“அழகேசனின் கள்ளச்சாராய வேலைக்கும், பெண்களை ஏமாற்றுவதற்கும் அந்த மாதிரி இடங்களில் அடிக்கடி மாட்டிக்கொள்வதற்கும், அடிதடி வன்முறைக்கும், கலாட்டாவுக்கும், ரௌடித்தனத்துக்கும், அரசியலில் நிழல் வேலைக்கும் என்றைக்கோ கிடைத்திருக்கவேண்டிய தண்டனை இப்போது கட்சித் தலைவரின் தோழமையால் தள்ளிப் போகிறது. (சூர.ப.81)

எனப் பலமுறை சொல்லியும் அழகேசன் திருந்தவில்லை. இந்தச் செயல் சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கிறது. இதனால் நாட்டிற்கும், வீட்டிற்கும் துன்பம் உண்டாகின்றது என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புகைப்பழக்கம்

புகை, மனிதனுக்குப் பகையாகிறது. புகைப்பழக்கம் புகைபிடிப்பவனை அழிப்பதோடு மட்டுமல்லாமல் பிறரையும் அழிக்கக்கூடிய சக்திவாய்ந்தது. ‘விலை’ புதினத்தில்,

“ஹாஸ்டலில் கண்விழிக்கும் முன் போஸ் டூலில் வைத்திருக்கும் சிகரெட்டைக் கையால் தடவித் தடவியே எடுத்து, நெருப்புப் பற்ற வைத்து வாயில் வைத்துச் சுகமாய் இழுத்தால்தான் கண்ணே திறக்கத் தோணும்.” (விலை.ப.6)

என்னும் வரிகள் வாயிலாக புகைபிடித்தால்தான் மற்ற செயல்களில் ஈடுபட முடியும் என்ற அளவிற்கு மாணவர்கள் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாய் இருப்பதை ஆ.பி. காட்டுகிறார்.

## மனப்போராட்டம்

மனம் தடுமாறி, தெளிந்த முடிவு எடுக்க முடியாமல் குழப்பமடைந்து காணப்படுவது மனப்போராட்டம் ஆகும். இது உளவியலின் ஒரு வகையாகவும் கருதலாம். இதனை 'கதா' புதினத்தில், நாற்பது வயது நிரம்பிய ஆதிபகவன், வீதி நாடகத்தின்பால் அக்கறை கொண்டவர். நாடகத்திற்கென்றே தன் வாழ்வை அர்ப்பணித்துக்கொண்ட இயக்குனர். நீலாயதாட்சியைச் சந்தித்த நாளிலிருந்து அவருடைய மனப்போராட்டம் தொடங்குகிறது எனலாம். ஆதிபகவனின் போராட்டத்திற்குப் பொருளியலோ, தாழ்வு மனப்பான்மையோ, வாழ்க்கையின் சூழலோ காரணமாக அமையவில்லை. அவருடைய மனப்போராட்டத்திற்கு அவருடைய வயதே காரணமாக அமைகிறது. நீலாயதாட்சியின் வெளிப்படையான பேச்சும், அவளுடைய பண்பு நலன்களும் ஆதிபகவனை அவள்பால் ஈர்க்கின்றன. மென்மையாகத் துளிரும் நேசம். காதலாக மாறுகிறது. ஆனால், வயதைக் காரணம் காட்டி எங்கே தன்னை மறுத்துவிடுவாளோ என்று ஆதிபகவன் அச்சப்படுகிறார். காதலை வெளிப்படுத்தாமல் நாகரிகமாக நடந்து கொண்டு நட்பைத் தொடருவதா? அல்லது காதலை வெளிப்படுத்தி என்ன வந்தாலும் அதனை எதிர்கொள்ள மனத்தைப் பக்குவப்படுத்திக்கொள்வதா? இந்த மனப்போராட்டமே இந்தப் பாத்திரப் படைப்பையும் செம்மைப்படுத்துகிறது என்று கூறலாம். ஆதிபகவனின் மனநிலையை ஆசிரியர் உணர்த்துகின்ற பங்கு இங்குச் சுட்டத்தக்கது.

"ஆனால் - அந்தச் சின்னப் பெண்ணின் உள்ளுணர்வுகள், ஆசைகள், அபிலாஷைகள் முழுசுமாய்ப் புரியாத நிலையில் அளவுக்கு மீறி அதீதமாய் உரிமை எடுத்துக் கொள்ளவும் தயக்கமாயிருந்தது அவருக்கு

இருபத்தஞ்சு வயசு இளமை ததும்பும் பெண்ணை – நாற்பது வயசுக்காரன் எவ்வளவு தூரம் மனரீதியில் நெருங்கிவிடமுடியும்? ஸ்நேகமாயிருந்தால் பதினைஞ்சு வயசு மூப்பைக் காரணம் காட்டி ‘விலகிப் போ நாயே. . .’ என்று விரட்டிவிட்டால் என்ன பண்ண? அதைவிடத் தொழில் ரீதியான நட்பை – நாகரிகத்துடன் நாசூக்காகக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற தயக்கத்திலேயே உள்ளுக்குள் சுருண்டார் ஆதிபகவன்.”

(கதாநாயகி., பக்.41-42)

சிந்தனையால் ஒன்றுபட்டாலும், வயது வேறுபாட்டின் காரணமாக இயல்பாகப் பழகவியலாத ஆண் - பெண் உறவு நிலையையும் ஆதிபகவனின் தவிப்பையும் உணர்த்துகிறது ஆதிபகவனின் மனப்போராட்டம்.

## வரதட்சணைச் சிக்கல்

பெண்ணினத்தைப் பற்றியிருக்கும் பல்வேறு சிக்கல்களில் வரதட்சணை ஒன்று. ‘வரதட்சணை’ என்பது திருமணத்தின் பொருட்டு பெண்வீட்டார், மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுத்த அல்லது கொடுக்க ஒப்புக்கொண்ட எந்தவொரு சொத்தையும் குறிப்பது. இது சமூக வழக்கமாக்கப்பட்டுவிட்ட ஒன்றாகிவிட்டது.

ஆண்கள் திருமணத்தின் போது, மணப்பெண் வீட்டில் வரதட்சணை வாங்கிக் கொண்டே பெண்களைத் திருமணம் செய்கின்றனர் என்பதை ஆசிரியர் ‘விடியும் நேரம்’ புதினத்தில்,

“பையனுக்கு ரெண்டு பவுனு சங்கிலி போட்டுருங்க; கல்யாண மோதிரமும். . . அப்புறம் ஆபீஸ் போகவர ஒரு மொபட் குடுத்துடுங்க. அதுல உங்க பொண்ணைத்தான உக்காரத்தி வச்சு ஓட்டப்போறான். அப்புறம் எங்களுக்கெல்லாம் காத்திரமாய் பட்டுப்புடவை

சின்னப்பொண்ணுங்களுக்குப் பட்டு சுரிதார், மத்த சீரெல்லாம் நீங்களாகவே செய்யமாட்டீங்களா என்ன?" (வி.நே. ப.20) முத பெண்ணுக்குத்தான் பண்ணியிருப்பீங்களே? என்று மாமியார் பட்டியலிட்டு கேட்கும் நிலைக்கு மாப்பிள்ளை வீட்டார்.

"மரியாதையாப் பையனுக்கு மோதிரம் போடல்லியா? வெள்ளி டம்ளர் கேட்டேனே. . . . .தரல்லிய்யா? தலைதீபாவளிக்குப் பண்றேன்னுட்டு மிச்சம் வச்சீங்களே அஞ்சு பவுனு செயினு. அது எங்க?" (வி.நே. ப.33)

என்ற நாத்தனாரின் குத்தல் பேச்சும், நக்கல் பேச்சும் பெண்ணாலே பெண் இழிவு படுத்தப்படுகிறாள் என்பதை அறிய முடிகின்றது.

ஜெயாவின் பெற்றோர் வரதட்சணையின் பொருட்டு அவமானப் படுத்தப்படுகின்றனர் என்பதை அறியலாம். இவ்வாறு, பொருளாதார மதிப்பீட்டிலேயே திருமணங்கள் நடைபெறுகின்றன என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும், பொருளாதாரத்தின் வாரிசாகவே வரதட்சணையும் இருக்கின்றது என்பதை உணரமுடிகின்றது.

'வரதட்சணை' ஆசையினால் முதல் மனைவியை கொன்றுவிட்டு அடுத்தடுத்துப் பெண் பார்த்து ஒவ்வொருவரிடமும் வரதட்சணையை வசூல் செய்யும் நிலையை 'வேடிக்கை மனிதர்கள்' புதினத்தில் சரசுவதியின் கணவன், நாத்தனார் வழி ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். சரசுவதி நாள்தோறும் கணவனிடம் மட்டுமின்றி நாத்தனாரிடமும் துன்பப்படும் நிலையை அறிய முடிகிறது. மேலும், தம்பிக்கு வரதட்சணை வாங்கி அதைக் கொண்டு நாத்தனார் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் நிலையையும் அறிய முடிகிறது.

திருமணத்திற்கு முன்னும், திருமணத்திற்குப் பின்னும் வரதட்சணை என்னும் கொடிய நச்சால் பெண்கள் துன்பப்படுகின்றனர் என்பதையும் இத்துன்பத்திற்குக் காரணம் ஆண்வர்க்கத்தின் பேராசையே என்பதையும் ஆசிரியர் ‘விடியும் நேரம்’ புதினத்திலும், ‘வேடிக்கை மனிதர்கள்’ ‘சூரியனை விடிய வைப்போம்’ ‘கதாநாயகி’ போன்ற புதினங்களின் வாயிலாகவும் எடுத்துக்காட்டியுள்ளார்.

## வரதட்சணைக் கொடுமை

“சமுதாய வாழ்க்கையில் பணமென்னும் நச்சுக்கிருமி சுரண்டல் என்னும் புற்றுநோயை வளர்த்திருக்கிறது”[30].

சமுதாயத்தில் பல பாவங்களைச் செய்யப் பணம் கொடுக்கவும், வாங்கவும் செய்கின்றனர். ‘வே.ம’ புதினத்தில் கதிர்வேலுவிற்கு முதலில் ஒரு பெண்ணை மணம் செய்து அவள் மூலம் கிடைக்கும் வரதட்சணையைப் பெற்றுக்கொண்டு அவளைக் கொன்று விடுகின்றனர். பின்னர் சரசுவை மணம் புரிந்து அவள் கொண்டு வரும் வரதட்சணையைப் பெற்றுக்கொள்வதுடன் அவள் வேலைக்குச் சென்றும், தனிப்பாடம் எடுத்தும் ஈட்டும் பணத்தையும் பறித்துக் கொள்கிறான். இங்கு வரதட்சணை வாங்குவது மட்டுமல்லாது அப்பெண்ணையும் கொன்று, குற்றத்தையும் மறைக்கின்றனர்.

மணக்கப்போகும் பெண்ணின் தகுதியைக் கவனிப்பதில்லை. பணமிருந்தால் கழுதைகளையும் கட்டித் தழுவுவார்கள் என்பதை கவிஞர் கா. வேலுச்சாமி,

“காசு பணம் மட்டும்
கழுதைகளும்
தர முடிந்தால்

அவைகளுக்கும்

கண் நிறைந்த

கணவன்மார்

கிடைக்கக் கூடும்''[31].

என்கிறார். 'வே.ம' புதினத்தில் சரசுவதியைத் திருமணம் செய்துகொள்ளும் கதிர்வேலு சரஸ்வதியின் சொத்தையும், பணத்தையும் பார்த்தே திருமணம் செய்துகொள்கிறான். அவளுக்குச் சீர் வரிசை என்னும் பெயரில் சரசுவின் தாய் வீட்டுப் பொருள்களையும், நகைகளையும் கொடுத்து அனுப்புகிறாள்.

சாரதாவின் மகள் நீலாவின் நிச்சயத்தின்போதும் சீர்வரிசையாகச் சரசுவின் சீர்வரிசைப் பொருட்கள் இடம் மாறுகின்றன. மேலும் நீலாவிற்கு வரதட்சணையாகச் சரசுவின் தாய், குடியிருக்கும் வீட்டையும் தருவதாகக் கூறுகின்றனர். மேலும், 'கதா' புதினத்தில்,

''வேறொண்ணுமில்லீங்க, கல்யாணமாகி அக்காவுக்கு நாலு வருஷமாச்சு. இந்த வருஷத்துத் தீபாவளிச்சீர் வாங்கிட்டு வா?ன்னு அக்காவை வீட்டோட அனுப்பிட்டாங்க, ஒரு மாசமாகுது அவ வந்து. இந்தப் பரிசுப் பணத்தை அவ கையிலே குடுத்து – மகராசியாப் போயிட்டு வாம்மான்னு அனுப்பி வைப்பேன். பணம் கேட்டு அடுத்த தரம் வர்றதுக்குள்ளே இன்னொரு விருது வாங்காமலா போயிடுவேன்'' (கதா.ப.2)

என்று மைதிலி வரதட்சணை கொடுமைக்கு ஆட்படுவதை நினைத்து நீலாயதாட்சி மனவேதனை அடைகிறாள்.

''ஆட்டோ வாங்கித் தரச்சொல்லு. . .காசுமாலை வாங்கிப் போடச் சொல்லுன்னு புகுந்த வீட்டிலே விரட்டல் வாய் செத்த புருஷன். .

.பேராசை புடிச்ச மாமியார் வறுமையான அப்பா. . . நா எங்கேன்னு போய் முட்டிக்க. . . ஐயோ கடவுளே. . .'' (கதாநாயகி. ப.11)

என்று மைதிலி வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் நிலையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

''ம்ஹூம்
வரதட்சணை முப்பதாயிரம்
ஐம்பதாயிரமாய் உருமாறினால்
பானுவின் ஊனம்
மறக்கப்படுமாம்
மன்னிக்கப்படுமாம்''
''குமாரிபானு
திருமதி பானுவாகப்
பெயர் மாற்றம் உருவாக
ஆறுலட்சம் அத்தியாவசியமாகிறது அண்ணா''. (சூ.வி.வை.ப.67)

எனச் ''சூரியனை விடியவைப்போம்'' புதினத்தில் பானு வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாவதை ஆசிரியர் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

## வேலையில்லாத திண்டாட்டம்

இன்றைய படித்த இளைஞர்களின் வாழ்க்கை, துயரம் நிறைந்ததாக இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையே என்ற வேதனைதான் எனலாம். அதனால் தான் சிலர் இந்த சமுதாயத்தின் மீது கோபம் கொண்டு, சமுதாய அமைப்பையே முற்றிலும் மாற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு புரட்சியாளர்களாக

மாறிவிடுகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை இழந்த நடை, வெறிச்சோடிப் போன விழிகள், வறட்சி என்பன அவர்களை அடையாளம் காட்டிவிடும்.

வேலையில்லாத் திண்டாட்டம் உலகெங்கிலும் நிறைந்திருந்தாலும், தமிழ்நாட்டில் அதன் கொடுமை மிகுதியாகவே உள்ளது எனலாம். பட்டம் பெற்ற இளைஞன் வேலை தேடுவதையே தனது வேலையாகக் கொண்டுள்ளான் எனலாம். வேலை கிடைக்காத அவனுடைய நிலையை வைரமுத்து,

"புத்தகத்துக்குள் வைக்கும்
மயிலிறகு மாதிரி. . . .
பட்டம் மட்டும் பெயரோடு
பத்திரமாய் இருக்கிறது"[32]

என்று தன் கவிதைகளில் கூறுகிறார். 'தகனம்' புதினத்தில் ஆசிரியர் சின்ராசு குலத்தொழில் பிடிக்காமல் வேறு வேலை தேடிச் சென்றும், வேலை கிடைக்கவில்லை என்பதை,

"சின்ராசு ஒவ்வொரு அலுவலகமாய் ஏறி இறங்குகிறான். போகிற இடமெல்லாம் கைவிரிப்புதான். எம்.ஏ., படித்தவர்கள்கூட பியூன் வேலைக்கு வந்து தவமிருக்கிறார்கள்." (தக.ப.55)

எனும் வரிகள் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்ற பழமொழியை மெய்ப்பிக்கின்றன. மேலும், 'சாருலதா' புதினத்தில்,

"நாளைக்கு இன்டர்வ்யூ இருக்கே. . ."
"ம். . . . .ம். . . "
"இந்த வேலையாச்சும் கிடைக்குமா சாரு. . ."
"நம்பிக்கையோட இருக்கலாம்மா . . . ."

"நம்பிக்கையோடதாண்டி அம்பத்திரண்டு வயசை ஓட்டிட்டேன். . . இனிமேயா நல்ல வாழ்க்கை வரப்போகுது?" (சாரு. பக்.26-27)

என சாருவின் தந்தை, சாருலதாவுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதை நினைத்து மனம் வருந்துகிறார். இதற்கொப்ப 'கா.சொ' புதினத்தில்,

"எம்.ஏ., பிஎச்.டி.,ன்னு படிக்கறவங்களுக்கே சரியான வேலை கிடைக்கமாட்டேங்குது. . . . நீ பி.ஏ., முதவருஷம் முடிக்கறதுக்குள்ளயே ஆயிரமாயிரம் சபலம். . .சலனம். . . எப்படித்தான் வாழ்க்கைல உருப்படறது நீ? ம். . . ?" (கா.சொ. ப.98)

என ராதாவின் அண்ணிவழி வேலைவாய்ப்பின்மையை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

## மூன்றாம் பாலினத்தவர் நிலை

சமுதாயத்தில் ஆண், பெண் என்ற இருபரிமாணங்களைத் தவிர மூன்றாவது பரிமாண இனமாக 'அலி' என்ற பிரிவினர் உள்ளனர். 'அலி' என்று அழைக்கப்படும் இவர்கள் இரு வேறு நிலைகளில் உள்ளனர். பெண் உடம்பில் ஆண்தன்மை பெற்ற ஒரு நிலையை 'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினத்தில் ஆ.பி. விளக்கியுள்ளார்.

பெண் உடம்பில் ஆண் - தன்மை பெற்ற தீபா, அவளுடைய பருவநிலை மாறியதும் எல்லோராலும் ஒதுக்கப்படுகிறாள். எங்கு சென்றாலும் பிறரின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாகிறாள். இந்நிலையில் தீபா ஊரைவிட்டு நகரத்திற்குச் சென்று தன் உடலமைப்பினை மருத்துவமுறையின் வழி மாற்றிக்கொள்கிறாள். இம்மாற்றத்திற்குப் பிறகும் தனிமைதான் அவளுக்கு வாழ்க்கை என்று ஆகிவிட்டது. மேலும், எல்லோரிடமும் இருந்து ஒதுங்கி வாழவே அவள் மனம் விரும்புகிறது. தீபாவின் குடும்பத்தில்

உள்ளவர்களுக்கு அவளால் அவமானத்தையும் அதனால் ஏற்படும் பல சிக்கல்களையும் ஆசிரியர் பின்வரும் கூற்றின்வழி புலப்படுத்துகிறார்.

“கை நிறையச் சம்பாத்தியமும், காதலும், சந்தோஷம்தான். ஆனாலும், என் நிலை வித்தியாசமானதுதானே? என்னால் என் தங்கைக்கும் அவமானம். . . அம்மாவுக்குத் தலைகுனிவு. ஊரில் கேலி, கிண்டல். மக்கள்தான் எத்தனை வித்தியாசமானவர்கள். . .மற்றவர்களின் வாழ்க்கையைத் தூண்டித் துருவி அலசி ஆராய்ந்து ரகசியங்களைத் தெரிந்து கொள்வதே அவர்களின் முக்கிய வேலையாக இருக்கிறது.”

(க.கை.பி. ப.1-2)

தீபாவை ரவிஷங்கர் காதலிக்கிறான். திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறான். ஆனால், தீபாவால் திருமணம் செய்துகொள்ள முடியாது. மீறித் திருமணம் செய்து கொண்டாலும், அவளால் குழந்தை பெற்றுக்கொள்ளும் தகுதியும் கிடையாது. உடல்ரீதியாக தீபா, கருத்தரித்தல் என்பது இயலாத ஒன்று ஆகும். இதுவே தீபாவின் மனத்துன்பத்திற்குப் பெரிதும் காரணமாகிறது என்பதை அறியமுடிகிறது.

## சாதி

சாதி என்பது மனிதன் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்ட ஒரு குறியீடு. இது மனித இனத்தைப் பாகுபடுத்துகிற ஒரு கருவியாகும். சாதிச் சிக்கல் என்பது இந்தியாவில் தீர்க்க முடியாத ஒன்றாக இயங்குகின்றது.

சாதிகளின் தோற்றத்தைக் குறித்து “சாதி என்பது வகை என்னும் பொருளைத் தரும். நல்ல சாதி மரம், நல்ல சாதி மாடு என்பவை மாட்டுள்ளும், மரத்துள்ளும் நல்ல வகையினைக் குறிப்பவை ஆகும். பண்டு

இந்தியாவில் நிலவிய நான்கு வருணங்களே சாதிகளாக உருவெடுத்தன”[33] என்பார் கே.கே. பிள்ளை. மேலும் பாரதியார்,

“சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்”[34].

என்கிறார். மேலும், பாரதிதாசனோ, சாதிப்பாகுபாட்டை உச்ச நிலையில் நின்று கண்டிக்கும் வகையில்,

“இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே”[35]

என்கிறார். இதனை ஆ.பி.

மக்களிடையே சாதி வேறுபாடுகள் காணப்படுவதை, தகனத்தில்

“ரெண்டு டீ என் கணக்கில் எழுதிக்கோ நாயரே.” (தகனம். ப.9)

எனும் வரிகள் வழி சாதியை வெளிப்படுத்தியுள்ளார்.

## மனித நேயம்

பிறர் துன்பங்கண்டு உதவுவதும், பிறருக்காக வாழ்வதும், மனித நேயமாகும். ஒருவர் துன்பப்படும்போது உதவ முன்வருபவரும், எல்லாச் சமயத்தினரும் தன்னையொத்தவர்களே என்ற எண்ணம் உடையோரும் மனித நேயம் உடையவர்கள் எனக் கருதப்படுவர்.

மனிதன் இந்தச் சமுதாயத்தின் உயிர்நாடியாவான். எத்தனை மதங்கள், எத்தனை கடவுள்கள் தோன்றினாலும், மனிதன்தான் இந்த உலகத்தினை இயக்கும் மாபெரும் தலைவனாவான். அவனே எல்லோருக்கும் நல்ல தீர்ப்பு வழங்கும் புலவனாவான் என்ற கருத்தில்,

“மனிதனே சமூகத்தின் உயிருக்கு நாடி சமய
மதங்கள் வளர்ந்தன கடவுள்கள் கோடி

மனிதனே உலகத்தின் தலைவன்! அவனே

அனைத்தும் மாண்புள்ள புலவன்”[36].

என மனிதப் பிறவியின் உயர்வையும், ஒருமைப்பாட்டையும் உயர்வு முறையில் சித்தர்கள் எடுத்துரைப்பர். ஆண்டாள் பிரியதர்ஷினி, ‘தகனம்’ புதினத்தில்,

“என்னை சம்பத்து? நாழியாவுது. . ரத்தம் கொட்டுதுபாரு. . .”

ப்ச. . .வலிதான்வுடு. . .ஒரு குண்டு வெறகு போட்டுட்டு வந்துடுக்கா... இல்லேன்னா நெஞ்சுக்குழி சரியா வேகமா அரைகுறையாக் கெடக்கும் பொணம்... பாவம்.”

‘பரவால்ல சம்பத்து. . . உசிரோட இருக்கற நீதான் முக்கியம் வா...”

“இல்லக்கா. . .போட்டு வந்துரு. . . மனசு கேக்கல்ல. . .யாருபெத்த புள்ளையோ. . .நல்ல படியாய்ப் போயிச் சேரட்டும் நம்மால ஏன் பாதகம்?”

(தகனம்.ப.136)

தனக்குத் துன்பம் நேர்ந்தபோதும்கூட தன்னுடைய தொழிலில் மனிதநேயத்துடன் காணப்படுகிறான் சம்பத்து. உயிரற்ற உடம்பின்மீதும்கூடக் கருணை காட்டும் பாத்திரமாக சம்பத்தையும், சின்னப் பொண்ணுவையும் ஆசிரியர் மனித நேயத்துடன் படைத்துக்காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மனிதனை மனிதனாக மதிக்கும் குணமும், பிறருக்கு உதவும் தன்மை கொண்ட பாத்திரமாகவும் ரங்கநாதன் என்பவரை ஆண்டாள் பிரியதர்ஷினி ‘சுருதி பிசகாத வீணை’ புதினத்தில் படைத்துள்ளார்.

“ஓட்டாண்டியாயிருந்து உச்சத்துக்கு வந்தவர். அதனாலோ என்னவோ மற்றவர்களின் வயிற்றுப் பசியை உணர்ந்திருந்தார்.”

“அவருடைய தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்குத் தினமும் இலவசச் சாப்பாடுதான்! தினமும் ஒரு கல்யாணம் மாதிரிதான் பந்தி நடக்கும்”

“தொழிற்சாலை சூபர்வைசர் ராமசாமியின் கடைசி மகள் மீனாட்சியை மனசார விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டார். சாதி, சமயம், ஸ்டேடஸ், அந்தஸ்து பார்க்காமல் கேள்வி கேட்டுத் துளைத்த பணக்கார நண்பர்களுக்கெல்லாம், அட, என்னய்ய பெரீய ஸ்டேடஸ்? நானே ஒரு காலத்தில் திருவோடு தூக்கினவன்தான் பொண்ணு நல்ல குணமாயிருந்தால் போதாதா? என்றார்.” (சு.பி.வீ. ப.16)

எனக் கேட்பது மனிதனை மனிதனாக மதிக்கும் நிலையை ஆசிரியர் உணர்த்துகிறார். இங்கு ஆசிரியர் மனிதநேயம் மிக்கவராகப் படைத்துக் காட்டுவது, தன்னையே செதுக்கிக்கொள்ளும் வெளிப்பாடாக அமைகின்றது எனலாம்.

‘கட்டில் மனசு’ புதினத்தில், காவேரியின் வீட்டு வேலைக்காரி ‘லஷ்மி’யின் மனித நேய மனம் வெளிப்பட்டு நிற்பதை ஆசிரியர் இங்கு அழகாக முன்னிறுத்தியுள்ளார்.

“காலைல – மகாலட்சுமியாட்டம் பேத்தி பொறந்திருக்கா... ஒண்ணுக்குப் பை சுத்தம் பண்ணனும். வெளிக்குப் போக வைக்கணும். சாப்பிடக் குடுக்கணுமே. என்ன அவஸ்தைப்படுறியோன்னு இருப்புக்கொள்ளல தாயி. . .”

“நீ இன்னாம்மா - இதுக்குப் போயி கண்ல தண்ணி உட்றே? ம்? நானும் பொம்பளை, ரெண்டு பேருக்கும் அல்லாம் ஒண்ணுதான். . .”

“இந்தா ஜூஸ் குடி தாயி. எனக்குச் சோறு போடற அன்ன பூரணியோட வயிறு வாட விட்டுருவேனா? இந்த உசிரு இருக்கற வரைக்கும் நா உனக்குச் செருப்பா இருப்பேன் தாயி. . .” (க.ம., பக்.209-211) எனும் வரிகள் வழி லஷ்மியின் மனிதாபிமானம் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

## ஸ்ருதியின் மனித நேயம்

ரகு தன்னைத் திருமணம் செய்யவில்லை என்றாலும் அவன் தாயை இழந்து நிற்கும் சூழலில் அவன் மீது கோபமின்றி அவனுக்கு ஆறுதலாக விளங்குகிறாள். ரகு தாயை இழந்த சமயத்தில் வீட்டில் முடங்கிக் கிடந்தால் துக்கம் அதிகரிக்கும் எனக் கருதி அவனையும், ஜரீனையும் ஆல் இண்டியா டூருக்கு அனுப்பி வைக்கிறாள் ஸ்ருதி. இச்சுற்றுலா ரகுவின் மனப்புண்ணை ஆற்றும் மருந்தாக விளங்கும் என்று கருதுகிறாள். அம்மா இறந்த துக்கம் இங்கேயே இருந்தால் அதிகமாய்த்தான் ஆகும். அதனாலே நீங்க ரெண்டு பேருமா ஆல் இண்டியா டூர் போயிட்டு வாங்களேன். (சு.பி.வீ. ப.20)

என்ற ஸ்ருதியின் கூற்றில் மனிதநேயம் புலப்படுகிறது. தன்னைத் திருமணம் செய்யாமல் ரகு புறக்கணித்த போதிலும், அவன் மனம் வருத்தமடையக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகிறாள்.

## மனித பலவீனங்கள்

யானைக்கும் அடிசறுக்கும் என்பதற்கிணங்க, சரசு தனது வாழ்வில் ஏற்பட்ட பலவீனத்தை நினைத்து வருந்துகிறாள். இதனை ‘வே.ம.’ புதினத்தில்,

“எத்தனை படித்து விவரமாய் இருந்தும் என்ன பிரயோஜனம்? எங்கேயாவது ஒரு புள்ளியில் ஏதாவதொரு பலவீனமான சமயத்தில் சிந்திக்க விடாமல் செய்கிறது விதி. தடுமாறி வலுவிழக்கச் செய்கிறது விதி”.

(வே.ம. ப.111)

என்று சரசு தனது வாழ்வில் சிறிதும் எதிர்பாராத விதத்தில் திருமணத்தை முடித்துக் கொண்டு இழிவாகப் பேசும் கதிர்வேலு, சாரதாவை பற்றித்தான் சிந்தித்தாள்.

சரசு தன்னைப் பெண் பார்க்க வந்தவர்கள் தன்னைப் பற்றி மிகவும் விமர்சித்த விமர்சனங்களால் வருந்தி திருமணமே வேண்டாம் என்னும் முடிவில் இருந்தாள். ஆனால், சாரதா மற்றும் கதிர்வேலுவின் அன்பான பேச்சிலும் அவர்கள் தங்களைப் புகழ்ந்த புகழ்ச்சியாலும் மயங்கி தனது வாழ்க்கையையே கொடுத்தாள். ‘உ.ஆ’ புதினத்தில் அரசியலில் எதிரிகளை அழிக்க நேரிடையாக அவர்களிடம் மோதாமல் அவர்களின் பலவீனங்களை அறிந்தே மோதுவர். விரோதிகள் இங்கு மாரி, என்பவன் செந்தில் நாதனை அரசியலில் இருந்து விரட்ட வழி தேடுகிறான். இறுதியில், செந்தில்நாதனின் பலவீனம் பூரணி என அறிந்து அவளைக் கொல்கிறான். மனிதனின் பலவீனம் அவனைத் தவறான செயலுக்குள் தள்ளிவிடும் என்கிறார்.

இதனைப் போன்று ‘கட்டில் மனசு’ புதினத்தில், காவேரியின் கணவன் சுந்தரத்தின் மனிதாபிமானமற்ற செயல்பாடுகளை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

“ஆக்ரோஷமாய்க் குரல் உயர்த்தினார். ஷோகேஸில் அடுக்கியிருந்த காவேரியின் நாவல்களை இழுத்து இறைத்துப் போட்டார். விசிறி எறிந்தார்... இப்படிக்கூட மனிதாபிமானம் இல்லாமல் மிருகத்தனமாய்ப் பேச முடியுமா?. . .” (க.ம.பக்.207-208)

எனும் வரிகள் சுந்தரத்தின் மிருகத்தனமான செயல்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

## திரைப்பட மோகம்

பொழுதுபோக்குக் கருவிகளில் தனியானதொரு இடத்தைப் பெற்றுள்ள திரைப்படத்தில் வரும் நிழல்காட்சிகளை உண்மை என நம்பி மக்கள் அவர்களுடைய வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். படைப்பாளர் ‘கானல் சொர்க்கம்’ புதினத்தில்,

“தியேட்டரில் சினிமாவுக்கு வந்தால் இப்படித்தான் திரையரங்கம் இருளில் மூழ்கி, சினிமா ஆரம்பித்து முடியும் வரைக்கும் ராதாவைத் தொட்டு. . . விளையாடி. . .கிச்சு கிச்சு. . .மூட்டி. . .பட்டும் படாமலும் கன்னத்தில் முத்தமிட்டு, தன் காலால் ராதாவின் காலைப்பின்னிக் கொண்டு கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, இன்னும். . .இன்னும். . .இன்னும் கொஞ்சம் விளையாடமாட்டானா என்று ஏக்கமாய்க் கூட இருக்கும்.

இது மாதிரி இன்னும் என்னென்னமோ. . .”(கா.சொ. ப.78-79)

என்ற வரிகளின் வழி திரைப்படம் இன்று மக்களை எந்த அளவு கவர்ந்துள்ளது என்பதைக் காணமுடிகிறது. மேலும், திரைப்படம் இன்றைய இளைஞர்களைச் சீரழிக்கும் நிலையையும் அறிய முடிகின்றது.

## மூடநம்பிக்கை

மனித வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக இருப்பவைகளில் மூடநம்பிக்கையும் ஒன்று. இதனை மு.மேத்தா,

“இரண்டு கைகளையும்
முடமாக்குவதல்லவோ
மூடநம்பிக்கை”[37]

என்கின்றார். மக்களிடம் காணப்படுகின்ற அறியாமையே மூடநம்பிக்கைகளுக்கு வழி வகுக்கிறது. இதனைக் கிராம மக்களிடம் அதிகமாகக் காணலாம். கிராம மக்களிடம் பலவகையான நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அந்த நம்பிக்கைகளுள் ஒன்று மூடநம்பிக்கையாகும். இதனை ஆ.பி. ‘வி.நே.’ புதினத்தில்,

“அந்தப் பச்சைப் பட்டுப் புடவையக் கட்டிக்கோ. உன் வாழ்க்கையாச்சும் எப்பவுமே தளதளன்னு பசேல்னு இருக்கட்டும். . .”

(வி.நே.ப.17)

“பிள்ளைத்தாய்ச்சிப் பொண்ணு கனமானது எதையும் தூக்க விட்டுடாத விஜயா, முன்னப்பின்ன உனக்கு அனுபவமில்ல. ஆங்காரத்துல தங்கச்சிய எதையும் சொல்லிடாத. கரிச்சுக் கொட்டிடாத, எல்லா வேலையும் பண்ற கோபத்துல சாபம் போட்டுடாத, நல்லபடியாப் பெத்துப் பொழைக்கணும் ஜெயா. திருப்பதி வெங்கடாசலபதிக்கு வேண்டிக்கோ,

உனக்கொரு நூறு ரூபாய் மஞ்சத் துணில முடிஞ்சு வைக்கறது கஷ்டமா என்ன? ம்? தங்கச்சிக்காகப் பண்ணு. சந்தோஷமாப் பண்ணு. (வி.நே.ப.40)

"அமோகமாப் பெருகட்டும் குழந்தே. . .பிள்ளையாரை மறந்துடாம கைங்காயம் ஏதாச்சும்பண்ணு. . .பெரிய மனுஷியா வருவே. . ." ஐயர் வாழ்த்தினார்.

"ம். . .ம். . .நிச்சயமா பிள்ளையாரப்பா நடத்திக்காட்டுவார். முழுசும் குருடியாயாச்சு. இனிமேல் நிரந்தரமாக இருட்டுதான்னு தத்தளிச்சேன். ஒரே நிமிஷத்துல வாழ்க்கையை விடிய வச்சுட்டார். இப்ப மனசெல்லாம் தைரியம். சிந்தனை தெளிவாயிருக்கு. . ." (வி.நே.ப.60)

எனும் வரிகள் வழி மூடநம்பிக்கையைப் பதிவு செய்திருப்பதை அறிய முடிகிறது.

மேலும் தா.த.தா.புதினத்தில்,

"அவ கொள்ளிக்கண் பட்டுத்தான் எனக்குப் பிறக்க இருந்ததும் பட்டுப் போயிடுச்சு." (தா.த.தா. ப.62)

என ஜெயா, ராஜியை மூடநம்பிக்கை கொண்டு பழிப்பதை அறிய முடிகிறது.

## விதி பற்றிய நம்பிக்கை

தா.த.தா.புதினத்தில்,

"என் தலைவிதிக்கு கடவுளை ஏன் திட்டறீங்க. ஆயா. . . போன ஜென்மத்திலே என்ன பாவம் பண்ணினேனோ - இப்ப அனுபவிக்கிறேன். என்னை மாதிரி. . .பணம் காசு இருந்தால் மட்டும் போதாது ஆயா. . .எல்லாத்தையும் அனுபவிக்கக் கொடுத்து வச்சிருக்கணும். நான் இந்த விதத்திலே ஒரு அதிர்ஷ்டக்கட்டை. . .?" (தா.த.தா.ப.12)

என்றவாறு விதியைப் பற்றி பதிவு செய்துள்ளார். 'கா.சொ.' புதினத்தில்,

"விதியே வலிய வந்து அவனுக்கு வாழ்க்கைச் சூழலை அமைத்துத் தரும்போது ஒத்துக்கொள்ள வேண்டியதுதானே அவனின் கடமை." (கா.சொ.ப.95)

எனும் வரிகள் வழி விதி பற்றிய நம்பிக்கையை அறிய முடிகிறது.

## தெய்வம் பற்றிய நம்பிக்கை

மனித குலத்தின் அறியாமையே மூடநம்பிக்கைகளுக்கு அடிப்படையாக அமைகின்றது எனலாம். இதனை ஆ.பி. 'சாருலதா' புதினத்தில்,

"நேரே விஷயத்துக்கு வர்றேன். என் கணவருக்கு ரெண்டாங் கல்யாணம் பண்ணிவைக்கணும். அது மூலமாவது வீட்டில் குழந்தையோட நடமாட்டம் இருக்கணும்னு நான் வேண்டாத தெய்வமில்லே, போகாத கோயில் இல்லை. இதுவரைக்கும் தெய்வமும் கண் தொறக்கல்லே. . . ப்ரேம்குமார் உங்க பொண்ணு மேல இருக்கிற நேசத்தை வெளிப்படையாய்ச் சொன்னார். ஏதோ இனம் புரியாத நெருக்கம். . .அன்பு. . .பூர்வ ஜென்மப் பந்தம். இந்த மாதிரி உறவிலே முடியணும்கறது தெய்வ சங்கல்பம் போல இருக்கு." (சாருலதா. ப.35)

என்று சாருலதாவில் காஞ்சனாவின் மூடநம்பிக்கையைச் சாடும் நிலையைக் காணமுடிகின்றது.

குழந்தைப்பேறு இல்லை என்பது கணவன் (அல்லது) மனைவிக்கு ஏற்படக்கூடிய ஒருவித உடல் குறைபாடு. ஆனால், அதனை அறியாது தெளிவுறாது, தெய்வத்தை நம்புவதும், அதனைப் பழிப்பதும், மனைவியே வேறொரு பெண்ணைக் கணவனுக்கு மறுமணம் முடித்து வைக்க

முன்வருவதும் என ஆசிரியர் மூடநம்பிக்கையைச் சாடியுள்ள பாங்கினை அறிய முடிகிறது.

"அழாதேம்மா சாரு. . .உன் நம்பிக்கைக்குதான் கடவுள் நல்ல வழி காட்டியிருக்காரே.. . .இனிமே நீ எப்பவுமே சந்தோஷமாய்த்தான் இருக்கணும். . ."

(சாருலதா. ப.47)

எனும் வரிகள் ஆசிரியர் கடவுள் நம்பிக்கையை முன்னிறுத்தியிருப்பதை காணச் செய்கிறது. மேலும், 'கதா' புதினத்தில்,

"வருத்தப்படாதீங்க நீலாயதாட்சி உங்க நல்ல மனசுக்கு கடவுள் நல்ல வாழ்க்கை தருவார். உங்க விருப்பம்போலத் திருமணம் அமையும். நானும் அதுக்காகப் பிரார்த்திக்கிறேன்." (கதா., ப.42)

எனும் வரிகள் 'கதாநாயகி' புதினத்தில், நீலாயதாட்சியின் மனவேதனை கண்டு ஆதிபகவன் ஆத்மார்த்தமாய் கடவுள் நம்பிக்கையை எடுத்துரைத்து ஆறுதல் கூறுகிறார்.

மேலும், 'க.கை.பி' புதினத்தில், மீனாவின் தந்தை முருகேசன் கூற்று வாயிலாக தெய்வநம்பிக்கை வெளிப்படுகிறது. இதனை,

"முருகேசனா கொக்கா? என் வம்சம் தழைக்கணும். வம்சம் வம்சமாய்ப் பெருகணும். . .என் பொண்ணு சொல்ற மாதிரி – சாதனை பண்ணனும். கல்யாணம் வேணாம்கறதெல்லாம் என் பேத்தி காலத்துல வேணாவரட்டும் எம்மவ தழைக்கணும். பேரன் பேத்தி எடுக்கணும். என் குலம் தழைக்கணும் வளரணும். மகமாயி எல்லாம் நல்லா நடத்திவை தாயி.. என்கிழவிக்காரி உசிரை அதுவரைக்கும் விட்டு வைதாயி. . ."

(க.கை.பி. ப.115)

எனும் வரிகள் வழி அறியமுடிகிறது. 'விலை' புதினத்தில்,

"என்னல்லே. . .எளமைத் துள்ளாட்டம் போடுது பேச்சுல. . .? ம்? எங்கவலை எனக்குத்தானே தெரியும்? தாயில்லாப் பெண்ணைக் கட்டிக் குடுக்கறதுன்னா சும்மாவா? பக்கத்திலே குடுத்தா – பொழுது விடிஞ்சா அடைஞ்சாப் பார்த்துக்கலாம்னுதேன் ஒம்மருமவளா அனுப்ப நெனைச்சேன். . .நாம நினைக்கற தெல்லாமா நடந்துடுது? யாரு யாருக்கு எங்க முடிச்சோ? பிரம்ம முடிச்சாச்சே. . ." (விலை., ப.53)

"யாருயாருக்குன்னு அவன்தான் முதல்லிய எளுதிடறானே நாம என்ன நெனைக்க? என்ன சொல்லுத இருளா?" (விலை., ப.15)

என்னும் வரிகள் தெய்வநம்பிக்கையை காட்டுகின்றன.

'கட்டில் மனசு' புதினத்தில்.

"கவலையேபடாதேம்மா. சாமிகிட்ட நான் சவால் விட்டிருக்கேன். என்னோட காவேரிம்மாவைக் குணப்படுத்தினாத்தான் நீ நெசம். இல்லாக்காட்டி வெறும் கல்லு. நா உன்னைக் கும்பிடறதையே விட்டுடுவேன். அப்படீன்னு சாமிக்கும் எனக்கும் ஒரு கணக்கு. அப்பப்ப குடுக்கற நாலணா கற்பூரம், ஒத்தை வாழைப்பழம், இணுக்குப் பூவு இதெல்லாம் வேணாம்னு சாமி வுட்டுருமா? அதான். சரிபண்ணிடுவார். வா சாப்பிடலாம். . ." (க.ம.ப.211)

என்ற லஷ்மியின் கூற்று வாயிலாகத் தெய்வநம்பிக்கை வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

## குழந்தைத் திருமணம்

ஓடி விளையாட வேண்டிய பால்ய வயதில் திருமணத்தினைப் பெற்றோர்கள் நடத்திட, பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதை புதினம் உணர்த்தி நிற்கிறது.

“பத்து வயதுக்குழந்தையை
மணமேடை ஏற்றினால்
நீ சிறைமேடை ஏறவேண்டும்
அவளுக்கு தாலி ஏறும் முன்
உனக்குக் கைவிலங்கு ஏறும்
தெரியுமா உனக்கு?” (சூ.வி.வை.ப.77)

சரஸ்வதி, பூவாயி என்ற பத்து வயதுக் குழந்தையின் பால்ய திருமணத்தை எதிர்க்கிறாள்.

“அது கிராமத்துக் கல்யாணம்
முதுமைக்கும், குழந்தைக்கும்
உறவுப்பாலம்
கட்ட நினைத்த கல்யாணம்.
பழுத்த ஆண் இலைக்கும்
பிஞ்சுப் பெண் துளிருக்கும்
பசுமைப்பாலம்
பூச நினைத்த கல்யாணம்.”
மூணுவேளைச் சோற்றுக்கும்
கடனில்லாக் காற்றுக்கும்
ஆசைப்பட்டு

சங்கரம்மா செய்யும் பொம்மைக் கல்யாணம்''

“சின்னக் குழந்தைக்குப்

பொருந்தாக் கல்யாணம்

உணர்வின் கொலையாயிற்றே.''

“ஏய்

திருமணத்தை தடுக்காதே

பட்டணம் திரும்ப

உயிர் இருக்காது

திருமணத்தை மறுக்காதே

மகளுக்கு அம்மாவாய்

உடலும் இருக்காது.

திருமணத்தை வெறுக்காதே

புருஷனுக்கு மனைவியாய்

உறவும் இருக்காது. ஜாக்கிரதை. . .''

“இந்தத் திருமணம்

சட்டப்படிக் குற்றம் தாத்தா.'' (சூ.வி.வை. பக்.126-129)

சங்கரம்மா என்ற பெண், பூவாயி என்ற தன் பத்து வயதுப் பெண் குழந்தைக்கு வயது முதிர்ந்த கிழவனைத் திருமணம் முடிக்க நினைப்பதும், அதனை சரஸ்வதி என்ற பெண் கடுமையாக எதிர்க்க, சரஸ்வதியை அந்த முதியவர் எதிர்ப்பதும், இளமைத் திருமணத்தின் தீமை பற்றி எடுத்துரைக்கும் விதமாகவும், இறுதியில் பூவாயியை சரஸ்வதி தத்து எடுத்துக்கொள்வதுமாக ஆசிரியர் ‘சூரியனை விடிய வைப்போம்’ புதினத்தில் படைத்துக் காட்டியுள்ளார்.

## முதியோர் அவலம்

தன் பிள்ளைகள் நலனுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் பெற்றோர் ஆவர். அவர்களின் எதிர்ப்பார்ப்பு தம்முடைய வயோதிக நிலையில் தன்பிள்ளைகளின் அன்பு உபசரிப்பாவது கிடைக்கவேண்டும் என்பதாகும். ஆனால், இன்றைய சமுதாயம் இதற்கு மாறாக உள்ளது. இதனை ஆசிரியர் ‘தகனம்’ புதினத்தில்,

“ஆமா? தாத்தா எங்க? திண்ணைல காங்கல்ல? காவல் காத்துட்டுக் கெடக்குமே?” (தகனம். ப.29)

“அடேய். .எம் பேத்தி பெரிய மனுசியாயிருக்கா. . .மருவாதியா நடுவூட்ல உக்காத்தி வச்சு ஒருத்தன் சேதி சொன்னானா நாய்களா. . .நா இருக்கிறது தெரியாம கண்ணு அவிஞ்சு போச்சா என்ன? நாகட்டைல போயிட்டேனா?

“தாத்தா. . .நீயும் நானுந்தான் வேண்டாப் பொறப்பாயிட்டம் வீணா வாய் குடுக்காத சும்மாக்கெட. . .”

சாம்பல் அடித்துக் கண்பார்வை போனப்புறம்தான் நடமாட்டம் கஷ்டமாயிருக்கிறது. ராவாய்ப் பகலாய் உழைத்த கட்டையை மூலையில் முடங்கச் சொன்னால் முடியுமா?” (தகனம். ப.39)

“நீ எடுத்துத்தாடா கோடித்துணி. . .இந்த வேட்டியைப் பாரு மாத்து வேட்டியே இல்லாமக் கட்டிக் கிளிஞ்சே போச்சு. . .” வயசை மறந்து கெஞ்சினார் தாத்தா. . .கட்டியிருந்த வேட்டியைக் கழற்றி உதறினார். உள்ளேயிருந்த கோவணம். . .நார் நாராய்க் கிழிந்திருந்தது. . . .

கண்ணில்லாத அந்த கிழம் படும் அவஸ்தையில் நெஞ்சுக்குழி எரிந்தது சின்னராசுவுக்கு. . .” (தகனம்., ப.40)

“ஏட்டி மாரி. . .எனக்கு ஒருவாகுடுட்டி பசி வயத்துக்காரனை விட்டுட்டு, புளி ஏப்பக்காரனுக்குப் பந்தி வைக்கீக? அடுக்குமாட்டி ஒங்களுக்கு? பேத்தி சடங்குப் பிரியாணிக்கிக் கையேந்த வைக்கீகளே. . .என்னாடி வெனையாய்ப் போச்சுது. . .” (தகனம்., ப.43)

என முதியோர் நிலை மற்றும் சமூக அவல நிலையைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

## போலித்தனம்

போலித்தனம் என்றும் நிலைத்துவிடப் போவது இல்லை. உண்மை இறுதி வரை தோற்றுவிடப்போவதும் இல்லை. ஆயின், சமூகத்தில் இன்று போலித்தனம் அனைத்து இடங்களிலும் தலைவிரித்தாடுகிறது. எல்லாத்துறைகளிலும் இது முதன்மை பெறுவதைக் காணமுடிகிறது. ‘வே.ம’ புதினத்தில்,

“திருமணத்திற்கு முன்பு, கதிர் வேனுவும் சாரதாவும் தங்களின் உண்மை குணத்தை மறைத்து சரசுவிடமும் அவள் தாயிடமும் அன்பாகப் பேசி ஆதரவாக நடந்து தங்கள் குடும்ப விவரங்களைக் கூறி, அவர்களின் குடும்ப விவரம் வங்கியில் உள்ள இருப்புத் தொகை, நகைகள் என அனைத்தும் கேட்டு, திருமணப் பேச்சைத் தொடங்கி அவர்களை இசையச் செய்கிறார்கள்.

‘உ.ஆ’ புதினத்தில், அரசியலில், மாரியை தலைவர், மாநாட்டுச் செயலாளராக அமர்த்துகிறார். அவன் தலைவரிடம் நல்லவனாக நடித்து இலட்சக் கணக்கில் பணத்தைத் திருடி பொய்க்கணக்கு காட்டுகிறான்.

‘கட்டில் மனசு’ புதினத்தில்,

ஜெயா சுந்தரிடம் மிகவும் அன்பாக இருப்பதாக நடிக்கிறாள். ஆனால், அவளுக்கு அன்பு சுந்தரிடம் இல்லை. அவன் வைத்துள்ள பணத்திடம்தான் என்பது இறுதியிலேயே தெரிகிறது.

“நா என்ன உங்க பொண்டாட்டியா? கணக்கு வழக்கு இல்லாம எனக்குச் செலவழிப்பீங்களா என்ன? . . .விட்ருங்க. பிரிஞ்சுறலாம். போறும் நம்ம பழக்கம். . .”

நாடக பாணியில் கையெடுத்துக் கும்பிட்டுக் கண்ணீர் வடித்தாள். . .

“சரி சரி கோவிச்சுக்காதே டார்லிங் . .

“ப்ச. . .என்னய்யா ஆம்பளை நீ?. . .இப்ப எனக்கு ஒரு நெக்லஸ் வேணும். . .”

“இப்ப இப்பவேதான் வாங்கணும். . . .”

“ஒரே போடாய்ப் போட்டாள் ஜெயா.”

நெக்லஸூம், வளையலும் வாங்கி, நவரத்ன மோதிரமும் ஹாரமும், வைர ஊசிப் புடவையும் வாங்கி சகலமும் அள்ளிக் கொண்டாள் ஜெயா. . .”

(க.ம.பக்.215-218)

எனும் வரிகள் வழி பெண்கள் மனத்திலும் வாழ்க்கையிலும் போலித்தனமான எண்ணங்கள் வெளிப்பட்டு நிற்பதை ஆசிரியர் இங்கு தனது புதினங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தொகுப்புரை

சமுதாய விளக்கம். அறிஞர்கள் கருத்து, இலக்கியமும் சமுதாயமும், சமுதாயமும் எழுத்தாளனும், வாழ்க்கைமுறை, சடங்குகள், பருவம் எய்திய விழாவில் சீர்வரிசை, சமூக மாற்றம், சமுதாய வழக்கம், சமுதாயக் கண்ணோட்டம், சமூக அவலம், வறுமைநிலை, அதன் பாதிப்பு, வறுமையில் செம்மை, உணவு, உடை, உறைவிடம், விருந்தோம்பல் பொழுதுபோக்கு, வழிபாட்டு முறை, தொழிலாளர்கள் நிலை, வெட்டியான் தொழில், குழந்தைத் தொழிலாளர்கள், தொழிலில் எதிர்கொள்ளும் சிரமங்கள், வாழ்க்கைப் போராட்டம், கல்விநிலை, பெண்கல்வியின் அவசியம், பெண்கல்விக்குத் தடை, அரசியல் நிலை, அரசியல் சூழ்ச்சி, அரசியலில் நேர்மை, காதல் நிலை, காதல் வலிமை, காதல் ஏக்கம், காதல் மோகம், நிறைவேறாக் காதல், மாணவிகளின் நிலை, புகைப்பழக்கம், மதுப்பழக்கம், வரதட்சணைக் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மூன்றாம் பாலினத்தவர் நிலை, சாதி, மனித நேயம், மனிதபலவீனங்கள், திரைப்படமோகம், மூடநம்பிக்கை, விதி பற்றிய நம்பிக்கை, தெய்வம் பற்றிய நம்பிக்கை, குழந்தைத் திருமணம், முதியோர் அவலம், போலித்தனம் என சமுதாயத்தை வெளிப்படுத்தும் விதமாக ஆ.பி. நேர்த்தியான அழகில் புதினங்களைப் படைத்துள்ளார். சமூகத்தின் நிலைப்பாடுகளையும் வாழும் மக்களின் வறுமை நிலையையும் காட்டியுள்ளார். தொழிலாளர்களின் நிலைமையையும், அவர்கள்படும் துன்பங்களையும் காட்டியுள்ளார்.

சமுதாயத்தில் பெண்ணுக்கெதிராய்த் திகழும் கொடுமைகள் களையப்பட வேண்டும். என்றும், சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் சிந்திக்கத் தூண்டும் வகையில் ஆ.பி. சித்திரித்துள்ளார். சமூகம் என்ற சூழலில் இலக்கியம் தோன்றியதையும், அதன் வளர்ச்சி நிலைகளையும் அறிய முடிகின்றது. சமூகச் சிந்தனையில் புதுமைப் போக்குள்ள ‘தகனம்’ பிற புதினங்களுக்கு முன்னோடியாக உள்ளது.

# அடிக்குறிப்புகள்

1. எஸ், தோத்தாத்திரி. தமிழ் நாவல் சில ஆய்வுகள், முதற்பதிப்பு, முன்னுரை.
2. கலைக்களஞ்சியம், தொகுதி.4, ப.477.
3. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி.8, ப.471.
4. Encyclopedia of the social science. P. 225.
5. பி.கோ. பாஸ்கரதாஸ். சங்கப்பாடல்கள் உணர்த்தும் நிலைபேறுடைய மானிட பதிப்புகள், ஆய்வுக்கட்டுரை, 1977, ப.24.
6. அகிலன், கதைக்கலை, ப.99.
7. அ.மு. பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், 2ஆம் பதிப்பு, ப.24.
8. இரா. தண்டாயுதம். நாவல்வளம். ப.63.
9. நா. வானமாமலை, தமிழர் வரலாறும் பண்பாடும், ப.74.
10. கலைக்களஞ்சியம், தொகுதி.4, ப.479.
11. ச. பரிமளா, வாஸந்தி நாவல்கள் ஓர் ஆய்வு, ப.2.
12. ந. ஜெகதீசன் (தமிழன்பன்) தனிப்பாடல் திரட்டு ஓர் ஆய்வு, ப.39.
13. நா. செயப்பிரகாசு. சிலப்பதிகாரம் காட்டும் தமிழகச் சமுதாய நிலை, ப.39.
14. அகிலன், மு.நூ., ப.96.
15. கோ. சரோஜா. பெண் படைப்பாளர்களின் புதினங்களில் பெண்ணியப் பார்வை, ப.76.
16. வைத்தியலிங்கம், தமிழர் பண்பாட்டு வரலாறு, ப.5.
17. தா.வே. வீராசாமி. தமிழ்நாவல் முன்னோட்டம், ப.60.

18. சீ. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.541.

19. இரா. பாஸ்கரன், வெள்ளி மலை நாவல் ஓர் ஆய்வு, ப.85.

20. கவிஞர் சுரதா. நேருவின் அறிவியல் ஆர்வம். ப.4.

21. தா.வே. வீராசாமி. தமிழில் சமூகநாவல், ப.188.

22. மு. வரதராசனார் (உரை) திருக்குறள், குறள் எண்.1041.

23. சு. ஔவைதுரைசாமிப்பிள்ளை. (உ.ஆ), மணிமேகலை பாத்திரம் பெற்ற காதை.6., 76-80.

24. சீ. பக்தவச்சல பாரதி., மு.நூ. ப.465.

25. பாரதியார் கவிதைகள், ப.248.

26. கல்யாண்ஜி கவிதைகள், பக்.29-30.

27. சாலை இளந்திரையன். சமுதாய நோக்கு, ப.5.

28. சா. வளவன், நாட்டுப்புறவியல் கட்டுரைகள், ப.94.

29. மேலது., ப.95.

30. கே. வெங்கட்ராவ் வரதட்சணை முதற்பதிப்பு, ப.30.

31. மேலது., ப.42.

32. வைரமுத்து, இன்னொரு தேசிய கீதம்., ப.91.

33. கு. சங்கரன், தமிழ் நாவல்களில் சாதி, ப.20.

34. பாரதியார் கவிதைகள், ப.180.

35. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, ப.99.

36. த.கோ. வேந்தன். (ப.ஆ) சித்தர் பாடல்கள், ப.107.

37. மு. மேத்தா. முகத்துக்கு முகம். ப.42.